விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 08 புதன்கிழமை (24.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 217

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# பிரி. நாடாளுமன்ற குழுவினர் தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு

## மீள்குடியேற்றம் குறித்து ஆராய்வு

(கிளிநொச்சி)

இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவினர் நேற்றுக் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்து பேசியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் சூறாவளி ஒருவர் பலி

தலைநகர் கொழும்பில் நேற்றுக் காலை வீசிய கடும் காற்றினால் பல வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

டி சேரம், தேசிய வைத்திய சாலை, கிருலப்பனை மற்றும் தெமட்டகொட ஆகிய பிரதேசங்களிலேயே இந்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் மின்சார தடையும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வீதிகளின் குறுக்கே விழுந்துள்ள மரங்கள் மற்றும் மரக் கிளை களை அகற்றுவதற்கான நடவ டிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தீயணைப்பு படையினர் தெரிவித்தனர்.

கொழும்பு, நாரஹென்பிட்டிய தனியார் (20ஆம் பக்கம் பார்க்க)

## போலி நாணயத்தாளினை அச்சிட்ட இளைஞன் கைது

### வங்கி ஊழியரும் உடந்தை

(யாழ்ப்பாணம்)

போலி நாணயத்தாள்களை அச்சிட்டு விநியோகம் செய்து வந்த இளைஞர் ஒருவரினை குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.


வண்ணார்பண்ணை ஆறுகால்மடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் ஆறுகால் மடத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கைது செய்யப்படும்போது போலி நாணயத்தாள்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ம.சு. கூட்டமைப்பில் பெரும்பான்மை ஈபிடிபிக்கே!

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பெரும்பான்மையான இடங்களில் ஈ.பி.டி.பியே போட்டியிடுகிறது.

36 வேட்பாளர்களில் 20 வேட்பாளர்கள் ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவர்கள் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஆகவே நாம் கூறுவதைத்தான் ஜனாதிபதி செயற்படுத்துவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று பி.ப. 6.00 மணியளவில் யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் ஏற்கெனவே எமது தெளிவான நிலைப்பாட்டை கூறியுள்ளோம். நாம் வெற்றியடைவோம் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு. அதனை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

நீங்கள் வெற்றிபெறுவதற்கு எவ்வாறான திட்டங்களை முன்னெடுத்து வருகிறீர்கள் எனக் கேட்டதற்கு,

எமக்கு நம்பிக்கையுண்டு. அதற்கான சூழலும் இங்கு உண்டு என்றார் அமைச்சர்.

மேலும் நாம் எதனைச் சொல்கிறோமோ அதுதான் நடந்து முடிந்துள்ளது.

எது (20ஆம் பக்கம் பார்க்க)

## சுயாட்சி அதிகாரம் வடக்கில் தேவை!

### - சனல் 4 இயக்குநர்



வடக்கிற்கு சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்ன சனல் 4 ஊடகத்தின் இயக்குநர் கெலம் மக்ரே தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டாலே தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பு கிட்டும்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## சீரற்ற காலநிலை நீடிக்கும்!

பலத்த காற்றுடன் கூடிய கடும் மழை இன்றுவரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

தென்மேல் பருவக்காற்றுக் காரணமாக மத்திய, சப்ரகமுவ, மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை நகரங்களிலும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தென் கடற்பரப்பு பகுதிக்கு அப்பால் காற்றின் வேகம் மணிக்கு 60 கிலோ (20ஆம் பக்கம் பார்க்க)

## திரைப்பட நடிகை மஞ்சுளா மரணம்



(சென்னை)

திரைப்பட நடிகை மஞ்சுளா விஜயகுமார் சென்னையில் தமது 59-வது வயதில் நேற்றுக் காலமானார்.

கட்டிலில் இருந்து விழுந்து அடிபட்ட பிறகு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சாந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி புறப்பட்ட படகு 70பேருடன் மாயம்!

இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு சென்ற அகதிகள் படகு ஒன்று காணாமல்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை மிரிஸ்ஸ என்ற இடத்தில் இருந்து கடந்த 17-ம் திகதியன்று புறப்பட்டதாக கூறப்படும் இந்தப் படகிற்கு என்ன நேரந்தது என்ற விடயம் இதுவரை வெளியாகவில்லை.

படகில் பயணித்தவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த படகு தொடர்பில் இலங்கை கடற்படைக்கு எவ்வித தகவல்களும் தெரிய (20ஆம் பக்கம் பார்க்க)

### பிந்திய செய்தி

இலங்கையிலிருந்து 290 கடல் மைல் தொலைவில் படகொன்று தத்தளித்துக் கொண்டிருப்பதாக மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகத்திற்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகத்திலிருந்து 70 பேருடன் கடந்த 17-ம திகதி (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சியின் கிளி.வேட்பாளர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் தம்பிராஜா குருகுலராஜா, பசுபதி அரியரட்ணம் மற்றும் ஓய்வுநிலை கிராம அலுவலரான சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஆகியோரே அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நடந்த கலந்துரையாடலின்போது மேற்குறிப்பிட்ட மூவரும் தேர்ந் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வடக்கு தேர்தலால்

# புதிய நெருக்கடியை எதிர்கொள்ளும் இந்தியா

பூட்டானின் தேர்தல் முடிவுகள் சாதக மானதாக அமைந்துள்ளமை தொடர்பில் ஆறுதலடைந்துள்ள புதுடில்லி, இலங்கையில் இடம்பெறவுள்ள தேர்தலால் இன்னொரு நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதாக பிரித்தானியாவின் டெய்லி மெயில் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மாகாண சபைகளுக்கு முழு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என இந்தியா கடுமையாக வலியுறுத்தி வருகின்ற போதிலும் இலங்கை அரசாங்கம் அதற்கு மறுப்புத் தெரிவித்து வருகிறது.

இந்தியா–இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13–வது திருத்தச் சட்டமூலத்தின் முக்கிய பகுதிகளை நீக்க வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

வட மாகாண சபைக்கான தேர்தல் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் இடம் பெறவுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் 13–வது திருத்தச் சட்டமூலத்தின் படி மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில்லை என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா–இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக இது தொடர்பாக டெய்லி மெயிலுக்கு கருத்துக் தெரிவித்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்தியா– இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவுதற்கு நாம் சிலவற்றை தியாகம் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள பசில் ராஜபக்ஷ மீண்டும் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கூடிய இன்னொரு சூழ்நிலையை நாம் தோற்றுவிக்க முடியாது எனவும் கூறியுள்ளார்.

இலங்கையில் தற்போது காணப்படும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற அமைதியான சூழலை நாம் இழக்க முடியாது எனவும் டெய்லி மெயிலுக்கு பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வடக்குத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கை அரசாங்கம் 13–வது திருத்தம் தொடர்பாக எவ்வகையான முடிவுகளை மேற்கொள்ளும் என்பது குறித்து புதுடில்லி கவனம் செலுத்தி வருகின்றது. (எ–11)

## குளவி கொட்டி மூவர் காயம்

குளவி கொட்டியதில் மூவர் படுகாய மடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் பிறவுண் வீதி நரிக்குண்டடியில் இடம் பெற்றுள்ளது.

நேற்று வீசிய பலத்த காற்றின் காரணமாக குளவிக் கூடு கலைந்ததிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் இரண்டு இளைஞர்களும் ஒரு பெண்ணும் படுகாயமடைந்த நிலையில் மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ–11)

## எந்திரவியல் கற்கைநெறி

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் எந்திரவியல் தொழில்நுட்பக் கற்கை நெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை ஒகஸ்ட் 22–ம் திகதி வரை பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஏ)

## பஸ்ஸிலிருந்து விழுந்தவர் சிகிச்சை பலனின்றிப் பலி

பேருந்தில் பயணித்து கொண்டிருந்த போது பின்வாசல் பகுதியால் தவறி கீழே விழுந்ததில் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து சம்பவம் கடந்த 15–ம் திகதி முகமாலைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பேருந்தில் பயணித்து கொண்டிருந்த போது கம்பியை பிடித்து கொண்டு நின்றுள்ள குறித்த குடும்பஸ்தர் இதன்போது வேகமாக திரும்பிய பேருந்தில் கைநழுவி தவறி கீழே விழுந்துள்ளார். இதனால் தலையில் படுகாயமடைந்த அவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்.அரியாலை பகுதியைச் சேர்ந்த ராமையா கோவிந்தசாமி (வயது 50) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தவராவர்.

இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ–6)


கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக
பொன்விழா நிகழ்வை முன்னிட்டு அமரர் நல்லையா பரமேஸ்வரி
ஞாபகார்த்தமாக நடத்தப்படும்

மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி

எமது மேற்படி கழகத்தில் நடத்தப்படும் மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் ஆண் வீரர்கள் எமது அலுவலகத்தில் காலை 9.00 மணிக்கும் பி.ப.2.00 மணிக்கும் இடையில் தங்கள் பெயர் விபரங்களை 30.07.2013 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ் மரதன் ஓட்டப் போட்டியானது 03.08.2013 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். பதிவு செய்யும் வீரர்கள் காலை 5.30 மணிக்கு முன் நிலைய முன்றலில் சமுகம் தரவும்.

நிர்வாகம்:
சம்பியன் லேன், கொக்குவில்.
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்
(C-4113)



பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6–10 P.M

✦ 6 மணிமுதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(C-4102)



காணி விற்பனைக்கு

நெல்லியடி, கரவெட்டி வடக்கு கொடிகாமம் வீதியில் கணேஷ பவனம் வீட்டுக்கு முன்பாகவும் கரவெட்டி பிரதேச சபை முன்பள்ளிக்கு அருகாமையிலும் 10 அடி அகலம் கொண்ட பாதையுடையதும் பிரதான வீதியில் இருந்து 100 அடி தூரத்தில் உள்ள மூன்று பக்கம் மதில் உள்ள 1 ¾ பரப்பு வெறும் சற்சதுரகாணி விற்பனைக்கு உண்டு.

விலை பரப்பு 15 இலட்சம், தொடர்பு: 0770267710


## 4 வருடங்களில் 40 இலட்சம் பேருக்கு போதனா வைத்திசாலையில் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 4 வருடங்களில் 37 இலட்சத்து 89 ஆயிரத்து 417 நோயாளர்களிற்கு சிகிச்சையளித்துள்ளது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கடந்த 4 வருடங்கள் வெளிநோயாளர்கள் 10 இலட்சத்து 85 ஆயிரத்து 289 பேரும், வரவுகள் 4 இலட்சத்து 43 ஆயிரத்து 71 பேரும், உள்ளக அனுமதி நோயாளர்களில் 21 இலட்சத்து 2 ஆயிரத்து 261 பேரும், சிகிச்சை நிலைய வரவுகளாக 26 ஆயிரத்து 284 பேரும், மகப்பேறு 28 ஆயிரத்து 70 பேரும், பெரிய சத்திரசிகிச்சை 96 ஆயிரத்து 475 பேரும், சிறிய சத்திரசிகிச்சை 7 ஆயிரத்து 967 பேருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

மேலும் 35 விடுதிகள் மற்றும் 15 நிபுணத்துவ அலகுகள் இருப்பதாக சுட்டி காட்டப்பட்டுள்ளது. (அ–4,5,6)

## இராணுவ நடவடிக்கைகளை பகிர்ந்து கொள்ள உகண்டா இணக்கம்

இலங்கையின் இராணுவ நடவடிக்கைகளை உகண்டாவுடன் பகிர்ந்து கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உகண்டாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அந்நாட்டு ஜனாதிபதி யொவரி முஸெவனியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போதே இலங்கை தனது இராணுவ நுட்பங்களை உகண்டாவுடன் பகிரவுள்ளதுடன் உகண்டா மக்கள் பாதுகாப்பு படைக்கு விசேட பயிற்சியையும் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும் இராணுவம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் ஒத்துழைப்பு உட்பட இருபக்க உறவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

என்பரபே அரச மாளிகையில் இடம் பெற்ற இப்பேச்சுவார்த்தையில் உகண்டாவுக்கான உயர்ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கணநாதனும் கலந்து கொண்டார்.

இந்த சந்திப்பின் போது உகண்டா பாதுகாப்புக்கான ராஜாங்க அமைச்சர் ஜேஜே ஒடெங் மற்றும் லெப்டினன்ட் ஜெனரல் சார்ளஸ் அன்ஜினா ஆகியோருடன் பாதுகாப்பு அதிகாரிகள் பிரதானி எயர் மார்ஷல் றொசான் குணதிலக்க மற்றும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பினையடுத்து உகண்டா ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ–11)

## ஐ.தே.கட்சியில் துவாரகேஸ்வரன்

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான காலஞ்சென்ற தி.மகேஸ்வரனின் சகோதரர் துவாரகேஸ்வரன் களமிறக்குவதற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளது.

வட மாகாண சபை முதன்மை வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் சகோரரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் மைத்துனருமான துவாரகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் துவாரகேஸ்வரன் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை வட மாகாணத்தின் ஏனைய வேட்பாளர்கள் தெரிவுகள் உட்பட வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களின் முதலமைச்சர் வேட்பாளர் மற்றும் ஏனைய வேட்பாளர்கள் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றதுடன் அவை தொடர்பில் தெரிவுக்குழுவில் உத்தியோக பூர்வமாகத் தீர்மானிக்கப்படவுள்ளது.

அத்துடன் மூன்று மாகாணத் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் குறித்தும் விசேடமாக ஆராயப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளார். (எ–11)


கண்ணீர் அஞ்சலி



அமரர் செல்வி கதிர்காமு ஷர்மினி

(முன்னாள் ஆசிரியை– கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை செல்வி கதிர்காமு ஷர்மினி அவர்கள் 22-07-2013 அன்று அகாலமரணமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி
(சி-4109)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சினத்தின் குணம்

ஒரு மனிதன் கோபப்படும் போது அவனை நன்றாக கவனித்துப் பாருங்கள். ஏதாவது ஒரு மிருகத்தின் சாயல் அவன் முகத்திலே தெரியும்.

முகம் அழகாக இருக்கிறது எப்போது? அவன் புன்னகையோடு இருக்கும் போதுதான். கோபமாக இருக்கும் போது முகம் அழகாக இருக்காது.

ஓர் உண்மை என்ன தெரியுமா?

கோபம் மனதைக் கெடுக்கும். உடல் நிலையையும் பாதிக்கும். கோபப்படுகிறவர்களின் ஆயுள் காலம் குறைகிறது- என்பது விஞ்ஞான உண்மை.

சிரிப்பவர்களுக்கு ஆயுள் காலம் அதிகரிக்கும் என்பது விஞ்ஞான உண்மையாகும்.

கோபப்படுகிறவர்களை யாருமே விரும்புவதில்லை. கோபம் செலுத்தும் பெற்றோரிடம் பிள்ளைகள் நெருங்காது. அத்துடன் கோபப்படும் அதிகாரிகளிடமும் ஊழியர்கள் நெருங்கமாட்டார்கள்.

கோபப்படும் வாத்தியாரிடமும் மாணவர்கள் அணுகுவதில்லை. "அவர் எப்போது பார்த்தாலும் "வள் வள்" என்று விழுவார் என்று கூறுவார்கள்.

சரி... இந்தக் கோபம் எதனாலே ஏற்படுகிறது? உங்களது இயலாமை காரணமாகத்தான் உருவாகிறது.

நீங்கள் நினைப்பதை நிறைவேற்றக்கூடிய சாமர்த்தியம் உங்களிடம் இல்லையென்கிறபோது அது கோபமாக வெளிப்படுகிறது...

திறமையுள்ளவன் கோப்பட வேண்டிய அவசியமே வராது.

ஒரு திறமையுள்ள உண்மையான கவிஞனிடம் சென்று ஒரு கவிதை எழுதிக்காட்டு என்று சொன்னால், அவன் உடனே எரிச்சலடையக் கூடாது... எரிச்சல் ஏற்பட்டால், அது அவனது இயலாமையைக் காட்டி விடும்.

சிற்பி சிலை செதுக்குவதற்குக் கோப்படக் கூடாது. அவன் கோப்பட்டால் வேலை நடைபெறாது.

உரத்தக் குரலில் சத்தம் போடுவதால், எந்தக் காரியமும் நடைபெறாது. வேலை நடக்கிறது மாதிரி ஒரு பாவனை இடம்பெறுமே தவிர வேறு எதுவும் இடம்பெறாது.

திட்டு வாங்குபவர்கள் யாரும் தாம் செய்வது தவறுதான் என ஒத்துக் கொள்வதில்லை. உணர்வதுமில்லை. இப்படி இருக்கும் போது திட்டுவதால் என்ன பிரயோசனம்? திட்டு வாங்கிறவர் திருந்த வேண்டும்.

திட்டுவதன்மூலம் ஒருவனை திருத்த முடியும் என்றால், திருடுபவனையெல்லாம் அழைத்து சிறிது நேரம் திட்டினால் அவன் திருந்தி விடுவான்.

கோபம் என்பது நாம் அடுத்தவர்களுக்குக் கொடுக்கும் தண்டனை அல்ல. அது நமக்கு நாமே கொடுக்கும் ஒரு தண்டனை. மற்றவர்களைத் திருத்துவதாக நினைத்துக் கொண்டு நம்மை நாமே கெடுக்கும் ஒரு முயற்சியாகும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தே.அ.அட்டையை பெற்றுக் கொடுக்க நடைபெற்றுவரும் நடமாடும் சேவை

வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப் படவிருக்கும் நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆளடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவையொன்றை ஆரம்பித்திருப்பதாக அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இந்நடமாடும் சேவையில் கடந்த ஏழு நாட்களில் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் 3 ஆயிரத்து 435 கிடைக்கப்பெற்றிருப்பதுடன் 3 ஆயிரத்து 118 பிறப்பத்தாட்சிப் பத்திரத்துக்கான விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நடமாடும்சேவையில்ஆட்பதிவுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஒருவரும் இணைந்திருப்பதாக குறித்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த 7 நாட்களில் ஆளடையாளங்களை உறுதிப்படுத்தும் 6 ஆயிரத்து 568 விண்ணப்பப்படிவங்கள் பெறப்பட்டிருப்பதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி வட மாகாணத்தில் 85 ஆயிரம் பேர் ஆளடையாள அட்டையின்றியிருப்பதால் அவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு தாம் முயற்சித்திருப்பதாக கபே தெரிவித்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் ஆயிரத்து 308 ஆளடையாள அட்டை விண்ணப் பங்களும் ஆயிரத்து 557 பிறப்பத்தாட்சி விண்ணப் பப்பத்திரங்கம் கிடைக்கப் பெற்றதாக அவ்வமைப்பு குறிப்பிட்டது.

16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச செயலகப்பிரிவு, யாழ். நகரப் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசெயலகப்பிரிவு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் 2 ஆயிரத்து 127 அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்களும்ஆயிரத்து 531 பிறப்பத்தாட்சிப் பத்திர விண்ணப்பப்படிவங்களும் கிடைக்கப் பெற்றிருப்பதாக கபே தெரிவித்தது.

நேற்று தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் நடமாடும் சேவை நடத்தப்படவிருப்பதாக நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஊடகவியலாளர் கருத்தரங்கில் இராணுவத்தினரும் பங்கேற்பு

அரசாங்க திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தியில் பிரதேச ஊடகவியலாளர்களின் பங்களிப்பு என்ற கருப்பொருளிலான ஊடகக் கருத்தரங்கில் இராணுவ அதிகாரிகள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டதோடு கருத்தரங்கிலும் 10 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் சிவில் உடையில் பங்கு கொண்டிருந்தனர். அரசாங்க தகவல் திணைக்களம் யாழ். மாவட்ட செயலகத்துடன் இணைந்து யாழ். பொது நூலகத்தில் நேற்று இந்த ஊடகக் கருத்தரங்கினை நடத்தியிருந்தது.

இதில் அரசாங்க திணைக்களம் சார்பாக அதன் பணிப்பாளர் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல உள்ளிட்ட அதிகாரிகளும் யாழ். மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகமும் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டதோடு தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ். தில்லைநாதன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது 512 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி மேஜர் அஜித் பல்லேவல மற்றும் இராணுவ அதிகாரி ஒருவரும் விருந்தினராக கலந்து கொண்டனர்.

இது தவிர 10 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் சிவில் உடையில் ஊடகக் கருத்தரங்கில் பங்கு கொண்டதாகவும் அரசாங் கத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொண்டதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. இதேவேளை மேற்படி ஊடகக் கருத்தரங்கில் விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உள்ளிட்டவர்கள் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்ட போதும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(அ-4-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 100-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 80 | 100 |
| தக்காளி | 80 | 40 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 40 |
| கோவா | 80 | 120 | 120 | 120 |
| கரட் | 140 | 150-200 | 120 | 160 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 140 | 140-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 130 | 120 |
| பாகற்காய் | 60 | 40 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | — | 60 |
| பயற்றங்காய் | 40 | 60 | 50 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 140 |
| பீற்றூட் | 60 | 50 | 100 | 30 |
| கறிமிளகாய் | 80 | 70 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 160 | 160 |
| போஞ்சி | 120 | 120 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | — | — | — | - |
| கீரை - 1 பிடி | 10 | 15-20 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | [illegible] | 40 | 30-35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 | 120 |

# இராசி பலன்

*24.07.2013*
*(ஆடி 08, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*துதியை முன்னிரவு 8.27 மணிவரை*
*திருவோணம் காலை 6.24 மணிவரை*
*அவிட்டம் பின்னிரவு 5.17 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*

**மேடம்** தொழில் ரீதியாக புதியவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், ஆன்றோர் சந்திப்புக்கள் இடம்பெறலாம், தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்** எதிர்பாராத சில மனஸ்தாபங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் கவனம் எடுக்க வேண்டிய நாள், போசன நன்மையுண்டு.

**கடகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகும், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**சிங்கம்** பழைய கடன்களை அடைக்க எடுத்த முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி மூலம் கனிவான தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், சுறுசுறுப்பாக செயற்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**துலாம்** நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், தாய்வழி ஆதரவு பெருகும், வழிபட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், சகோதர ஒற்றுமை பலப்படும், போசன சுகமுண்டு.

**தனுசு** எதிர்பாராத வகையில் சில தனவரவுகள் வந்து சேரலாம், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உடல் நலம் சீராகும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும், சயன சுகக் குறைவான நாள்.

**மீனம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், உறவினர் வருகையுண்டு, நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை கட்டுரை போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை -சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 04 ஆம் திகதி நடைபெறவுள்ள இப்போட்டிகள் தரம் 1,2 பாலர் பிரிவிலும் தரம் 3, 4 கீழ்ப்பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவுக்கு நத்தார்படை ஞானன் பசு, பொன்னார் மேனியனே ஆகிய இரு திருமுறைகளும் கீழ்ப்பிரிவுக்கு பித்தா பிறைசூடி, மற்றுப்பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் சனிக்கிழமை ஆகும்.

பங்குபற்ற விரும்புவர்கள் சைவ சமய அபிவிருத்திக்கழக அறிவகம், இல 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழக சமயப் பிரசாரகரும் உதவிப் பரீட்சை செயலருமான சு. ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

இப் போட்டி முடிபுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை தினத்தன்று வழங்கப்படவுள்ளது. (அ)



நன்றி: மிரர்

# வடக்கு மாகாணத்தை சேர்ந்த மக்களுக்கு புலிகள் என்ற முத்திரை குத்தப்படுகிறது

## யு.எஸ்.எயிட் பிரதிநிதிகளுக்கு சுரேஷ் எம்.பி. எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

**யுத்தத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு புலிகள் என்ற முத்திரை குத்தப்படுவதோடு போதியளவு உதவிகளும் வழங்கப்படுவதில்லை என யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது சுட்டிக்காட்டப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

அத்தோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசாங்கம் மக்களின் நலனைக் கருத்திற்கொள்ளாது குடும்ப ஆட்சி நடத்தி வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கட்டப்பிராயிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் நேற்றுக்காலை 8.30 மணியிலிருந்து 10 மணிவரை அமெரிக்காவின் வோஷிங்டனில் இருந்து வந்திருந்த யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் பிரதிநிதி நூடிஸ் நன்பர், அமெரிக்க தூதுரக அதிகாரி மைக் எல்வின் உள்ளிட்டவர்களுடன் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் பிரதிநிதிகள் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இதன்போது அடுத்த 3, 4 வருடங்களுக்கு இலங்கைக்கான யு.எஸ்.எயிட் ஊடான அமெரிக்க உதவி சம்பந்தமாகப் பேசப்பட்டது.

அத்தோடு இத்தகைய உதவிகளை வழங்க இலங்கை நாட்டிலுள்ள நிலைமைகள் எவ்வாறு இருக்கிறது, ஜனநாயக சூழல் எவ்வாறு இருக்கிறது, முக்கியமாக வடக்கு மாகாண நிலைமைகள் எவ்வாறு இருக்கிறது. தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் நிறைவு பெற்றுவிட்டதா? இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் காணிகள் திருப்பிக்கொடுக்கப்பட்டுள்ளதா? விவசாய நிலைமைகள் எவ்வாறு இருக்கிறது? மீன்பிடி நிலைமைகள் எவ்வாறு இருக்கிறது? போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அதேவேளை வடக்கு மாகாணத்திற்கு மாகாண அரசு ஒன்று வந்தால் அதன் ஊடாக மக்களுக்கு உதவி செய்யமுடியுமா? மாகாண அரசாங்கத்திற்கான அதிகாரங்கள் இருக்கின்றனவா? மாகாண அரசாங்கத்திற்கு நிதி சம்பந்தமான அதிகாரம் எவ்வளவு தூரம் இருக்கின்றது?மக்களுக்கு உதவி செய்யக்கூடிய அதிகாரங்கள் இருக்கின்றனவா? போன்ற பல விடயங்களும் ஆராயப்பட்டன.

இதன்போது எமது தர்ப்பினரால் இலங்கையில் ஒட்டுமொத்தமாக ஜனநாயகம் மறுதலிக்கப்படுகின்ற சூழ்நிலை தொடர்ந்து காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக ஊடகவியலாளர்களின் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்படுவதும் தாக்குதலுக்குள்ளாகுவதும் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

இதுதவிர அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தாக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது, சுதந்திரமாக செயற்படமுடியாத நிலை என்பன காணப்படுகின்றன.

இந்த அரசாங்கம் தனது குடும்ப ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் முக்கிய குறிக்கோளாக இருக்கிறது.

வடக்கு மாகாணத்தில் மிகவும் பெருமளவில் தமிழ்மக்களுடைய காணிகள் இராணுவத்திடம் இருக்கிறது. ஆகவே பொதுமக்கள் தங்களுடைய வளம்கொழிக்கின்ற பூமிக்குச் செல்ல முடியாத நிலை காண்படுகின்றது.

விவசாயம் செய்யமுடியவில்லை. மீன்பிடித் தொழிலில் ஈடுபடமுடியவில்லை. இதற்கு கடற்படையினரின் தடைகள் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

இதனைவிட வடக்கு மாகாண சபை தொடர்பில் மக்களுக்கு அதிக எதிர்பார்ப்பு இருக்கிறது. ஆனால் அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மாகாண சபைக்கு அதிகாரம் இருக்கிறதா? அல்லது அந்த அதிகாரத்தை இந்த அரசாங்கம் வழங்குமா? என்றால் இல்லை.

எனவே இவ்வாறான நிலையில் தமிழ்மக்களுக்கு நிதிவழங்கலும் போதாது, அதற்கான சட்ட அதிகாரங்களும் போதாது. ஆகவே யு.எஸ்.எயிட் போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் உதவி செய்வதனூடாகத்தான் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு உதவி செய்ய முடியும்.

மேலும் யுத்தம் காரணமாக இங்கு பலர் அங்கவீனர்களாகவும் விதவைகளாகவும் உள்ளனர். இது மிகவும் முக்கியமான பிரச்சினை. இவர்களைப் போன்றவர்களுக்கு அர




சாங்கம் ஏந்த உதவிகளையும் செய்ய வில்லை.

புலிகள் என்ற முத்திரை குத்தி இவர்களுக்கான உதவிகளை வழங்குவதில் புறக்கணிப்புச் செய்து வருகின்றது எனத் தாம் பல விடயங்களை சுட்டிக்காட்டியதாகவும் இது தொடர்பில் யு.எஸ்.எயிட் நிறுவன பிரதிநிதிகள் சாதகமான முடிவுகளை எடுப்பதாக தமக்கு வாக்குறுதி வழங்கியதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் பிரதிநிதியும் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி சர்வேஸ்வரன், சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டதாகவும் தெரிவித்தார். (அ-6)

# மாநகரசபையின் கட்டுரைப்போட்டி

யாழ்.மாநகரசபையின் கலாசாரப் பகுதியால் நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடத்தப்படும் கட்டுரைப்போட்டி எதிர்வரும் 27-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். விண்ணப்பித்த மாணவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார். (அ)



ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலைய அனுசரணையுடன் யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்துடன் இணைந்து செயற்படும் ஞானக்குழந்தை இல்ல அறிவொளி முன்பள்ளி விளையாட்டு போட்டி அண்மையில் யா/வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய பாடசாலை மைதானத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிலையத்தலைவர் சி. க. [illegible] பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மாணவன் ஒருவருக்கு [illegible] கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தின் தற்போதைய நிலை இங்கும் ஏற்படலாம்

## அஜித் எம்.பி. தெரிவிப்பு

எகிப்தில் தற்போது நிலவிவரும் நிலைமையைப் போன்று நாட்டில் ஓர் நிலைமை ஏற்படக் கூடுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கம் பல்வேறு வர்த்தக விடயங்களை இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளதாகவும் இது ஆபத்தானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத்தினர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதானது ஜனநாயக நாடுகளுக்கு உசிதமான தல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார். இலாப நோக்கத்துடன் வர்த்தக நடவடிக் கைகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் இராணுவத்திற்கு அதிகாரம் அளிக்கும் அமைச் சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எகிப்தில் ஜனநாயக ரீதியாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி மொஹமட் மொர்சீ இராணுவத்தினருடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டதாகவும் அதுவே அவரது பதவி கவிழ்ப்பிற்கு ஏதுவானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இராணுவத்தினர் வர்த்தக நடவடிக்கை களில் ஈடுபட்டு வந்தனர். எகிப்து அரசாங்கமும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முயற்சித்த போது இராணுவத்தினர் அரசாங்கத்தை கவிழ்த்ததாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் தனியார் நிறுவனங்களுமே நாட்டில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பிக்குகளுக்கு தனி நீதிமன்றம்

பிக்குகளுக்கு பிரத்தியேக நீதிமன்றம் ஒன்று வெகுவிரைவில் அமைக்க உத்தேசித்துள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார். கண்டியில் இடம் பெற்ற தேர்தல் விழிப் புணர்வுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த விகாரைகள், பிக்குகள் தொடர்பான முறைப்பாடுகள், பிணக்குகள் போன்றவற்றை கையாள பொதுநீதிமன்றங்களுக்கு செல்லாமல் தீர்த்துக் கொள்ள இந் நீதிமன்றங்கள் உதவும்.

அத்துடன் பௌத்த மதகுருக்கள் கௌரவமிழக்காத வகையில் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு இத்தகைய நீதிமன்றங்கள் வழி வகுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## துடுப்பாட்டப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

இணுவில் கலைஒளி மன்றத்தின் கணேஸ்வரியம் வெற்றிக் கிண்ணம், மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

9 பேர் கொண்ட அணிக்கு 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் தமது விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ள 07795 95765 அல்லது 0772119515 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மன்றத்தினர் கேட்டுள்ளனர். (அ)

## உடற்பயிற்சி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்

கிரிக்கெட், காற்பந்து, வலைப்பந்து மற்றும் அனைத்து விளையாட்டுக்களையும் பயிற்றுவிக்கக்கூடிய டிப்ளோமா தாரிகள் மற்றும் அனுபவமுள்ள உடற்பயிற்சியாசிரியர்கள் தேவை.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவை புரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

உணவு, தங்குமிடம் என்பன வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆண், பெண், இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 30.07.2013**

தொடர்புகளுக்கு: தி.இராசநாயகம்
தலைவர்: மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,
ஜெயந்தி நகர், கிளிநொச்சி
தொலைபேசி இலக்கம்: 0770604950 - 021 4923118

இவ்வண்ணம்
தி.இராசநாயகம்,
தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம். (சி-4110)

### வயாவிளான் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள புனிதயாகப்பர் ஆலய திரு நாள் திருப்பலி நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை அருட்திரு வண. பிதா அன்ரனி பாலா அடிகளார் மேற்கொண்டுள்ளார்.

திருவிழா திருப்பலிக்கு செல்லும் பங்கு மக்கள் மற்றும் பக்தர்களுக்காக போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் யாழ். சென்.சாள்ஸ் மகாவித்தியாலதத்திற்கு முன்பாகவும் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்திலும் மற்றும் பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திலும் காலை 7.30 மணிக்கு ஒன்றுகூடு மாறு ஆலய ஏற்பாட் டுக் குழுவினர் அறி வித்துள்ளனர். (அ)


உங்கள் முகம், மேனி, பளபளக்கவேண்டுமா?
எரி காயங்களினால் ஏற்பட்ட தழும்புகள் மாறவேண்டுமா?
இன்றே பாவியுங்கள்

'றோயல் ஒலிவ் ஒயில்'
Product of Spain

உணவுத் தேவைகளுக்கு ஏற்ற சுத்தமான ஒலிவ் ஒயில்




ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

Re packed By :
**Royal Industries**
No.221/1, Adamally Building,
Wolfendhal Street,
Colombo - 12, T.P: 0777277670
அனைத்து பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சி-4105)


## அரசாங்க அறிவித்தல்
## யாழ்.மாவட்ட செயலகம்
## கேள்வி கோரல் 2013

மாவட்டச் செயலகத்தால் கீழ்வரும் பொருட்களுக்கான கூறுவிலைகள், பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்கள் மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 25.07.2013 ஆம் திகதியிலிருந்து 15.08.2013 ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் காலை 9 மணி - பி.ப. 4 மணிவரையும் விநியோகிக்கப்படும். மேலதிக விபரங்களை மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பொருட்கள் விபரம் வருமாறு,

1. காகிதாதிகள்/எழுதுபொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் விநியோகித்தல்
2. அடையாள அட்டைகள் தயாரித்தல்
3. மின்சார உபகரணங்கள் விநியோகித்தல்
4. நுகர்வுப் பொருட்கள் விநியோகித்தல்
5. புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி இயந்திரம் என்பவற்றிற்கான ரோனர்கள் விநியோகித்தல்

**சுந்தரம் அருமைநாயகம்,**
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (சி-4107)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 1<br>உயரம்: 5'8"<br>கி.பா : 17<br>தகைமை/தொழில்: A/L<br>**Framing Work** தனியார்<br>தொ.இ:B2085 | பிறப்பு: 1987 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா : 27 செ 1<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ:G2103 |
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>உயரம்: 5'5"<br>கி.பா : 22.5 சூ,செ 5<br>தகைமை/தொழில்: Bsc<br>மாவட்ட அதிகாரி<br>தொ.இ:B2086 | பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா : 14 செ 2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G2097 |
| பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>உயரம்: 5'6"<br>கி.பா : 28<br>தகைமை/தொழில்: A/L,<br>**Welding** கனடா<br>தொ.இ:B2089 | பிறப்பு: 1990 இந்து(V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா : 34.25<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:G2101 |
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>உயரம்: 5'7"<br>கி.பா : 29 செவ் 2<br>தகைமை/தொழில்:O/L<br>வியாபாரம்<br>தொ.இ:B2090 | பிறப்பு: 1987 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா : 27 செ 1<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ:G2103 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு திரும்புவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

**தமிழ்நாட்டின் முகாம்களிலும் வெளியிடங்களிலும் வசித்து வரும் இலங்கைத் தமிழர்கள் திரும்பும் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருவதாகவும் இலங்கையை விட தமிழ்நாடு பாதுகாப்பானது என்று அவர்கள் உணர்வதே அதற்குக் காரணம் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

தமிழ்நாட்டில் உள்ள 102 அகதி முகாம்களில் 60 ஆயிரத்து 725 இலங்கை தமிழர்கள் வசித்து வருகின்றனர்.

இவர்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் நிதியுதவியும் அத்தியாவசிய பொருட்களும் வழங்கப்படுகின்றன.

முகாம்களுக்கு வெளியிலும் பல ஆயிரக் கணக்கான இலங்கைத் தமிழர் குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்நிலையில் இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் சொந்த நாட்டுக்குத் திரும்பி செல்லும் இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையில் போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டும் அதிகபட்சமாக 3ஆயிரத்து 78 பேர் தாயகம் திரும்பிச் சென்றனர்.

அதற்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் இறுதிப் போர் தொடங்கிய போது தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் மீண்டும் தாயகம் திரும்புவோரின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. அடுத்தடுத்த ஆண்டுகளில் உச்சத்துக்கு சென்ற இந்த எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக குறைந்து வருகிறது.

இது குறித்து தமிழ்நாடு அரச அதிகாரிகள் கூறுகையில்,

இறுதிப்போருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் வந்தவர்களே போர் முடிந்த பின் சொந்த ஊருக்குத் திரும்ப செல்கின்றனர்.

தற்போதுள்ள இளைய தலைமுறையினர் யாரும் இலங்கைக்கு திரும்பிச் செல்ல விரும்புவதில்லை. காரணம் இலங்கையை விட தமிழ்நாடே தமக்குப் பாதுகாப்பானது, உறவானது என்று நினைக்கின்றனர்.

முகாம்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கானவர்களில் பெரும்பாலான இளைஞர்கள் தமிழ்நாட்டுக்கு வந்த பின்னரே பிறந்தவர்கள். எனவே அவர்கள் இலங்கை செல்வதை விட தமிழ்நாட்டில் இருக்கவே விரும்புகின்றனர்.

அதுமட்டுமின்றி போருக்குப் பின்னர் தமிழர்களின் குடியிருப்புகளில் சிங்களக் குடியிருப்புகள் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன. எனவே அங்கு செல்வதை பாதுகாப்பு குறைவானதாக நினைக்கின்றனர்.

எனவே தாயகம் திரும்புகின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்து வருகிறது. எதிர்வரும் காலங்களில் இன்னும் குறையலாம் என்று தெரிவித்துள்ளனர். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## உணவே மருந்து

சித்தமருத்துவம் தமிழர்களின் வாழ்க்கை முறையையும் சமய கலாசாரத்தையும் அடித்தளமாகக் கொண்டு. உருவாக்கப்பட்டதால் அதில் பாரம்பரியமான சிறந்த உணவுப் பழக்கவழக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே தமிழர்களின் உணவு முறைகளில் மருத்துவ சம்பந்தமான பல உண்மைகள் அடங்கியிருப்பதில்வியப்பேதும்இல்லை. மக்களின்நாளாந்த வாழ்க்கையிலும் நோய் நிலையிலும் உடல் உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு உரிய உணவு முறைகளை சித்தவைத்தியம் போதியளவு போதித்துள்ளது. நல்ல ஆரோக்கியமான உணவை உட்கொள்ளுதல் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். ஆகாரம், நல்லுறக்கம், நெறிப்படுத்தப்பட்ட தாம்பத்திய வாழ்க்கை இவற்றை வாழ்க்கையின் முக்கிய மூன்று தூண்களாக ரிஷிகள் பல இடங்களில் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் உணவு இன்றியமையாதது ஆகும். ஸ்தூல பிராணனான உணவானது சூட்சும பிராணனை உடலில் நிலை நிறுத்த உதவுகிறது.

உணவில் பொதுவாக அறுசுவைகளும் இன்றியமையாதவையாகும். அதிலும் கைப்புச் சுவையுள்ள உணவுகளை கட்டாயம் சேர்த்துக் கொள்ளல் அவசியம். ஆனால் நாம் நம் உணவில் அறுசுவைக்குப்பதில் கைப்புச் சுவைக்குரிய உணவுவகைகளை கலந்துண்ணாமல் காரம், இனிப்பு, துவர்ப்பு, உப்பு ஆகிய உணவு வகைகளை மட்டும் உண்டு வருவதால் உடலின் தேய்மானங்களை புதுப்பிக்க உற்பத்தியாகும் கலவை தரமற்றதாய் உற்பத்தியாகிறது. இதனால் உடலில் தளர்ச்சி ஏற்படுகிறது. அதாவது கைப்புச்சுவையான உணவுகள் எமது உடற்கலங்களில் ஏற்படும் தேய்மானங்களை புதுப்பிக்க அவசியமாகின்றன. ஆகவே அனுதினமும் ஒருவேளை உணவிலாவது கசப்புக்குரிய பாகற்காய், குருவித்தலைப்பாகல், காற்றோட்டி, அகத்திக் கீரை, சுண்டங்காய் இலைகளை உணவுடன் சேர்த்து மென்று சுவைத்து விழுங்கிவர வேண்டும். இதனால் உடற்கலங்களில் ஏற்படும் தேய்மானங்களை புதுப்பிக்க உதவிபுரிகின்றது.

மேலும் சாப்பிடுகின்றவற்றை நன்றாக மென்று சாப்பிட வேண்டும். முன்னைய காலத்தில் இருமுறை உணவுப்பழக்கமே இருந்துள்ளது. இப்போது அது பல முறையாக மாறியுள்ளது. உண்ணும்போது கீழ்க் கண்ட கருத்துக்களை மனதில் வைத்திருப்பது நல்லது. உணவைச் சாப்பிடும் போது எப்படி சாப்பிட வேண்டும் என சித்த மருத்துவம் அழகாக எடுத்துரைக்கின்றது. பத்தியமான உணவையும் அபத்தியமான உணவையும் ஒருவர் கலந்து சாப்பிட்டால் அதற்கு சமாஸனம் என்று பெயர். சமாஸனம் என்றால் உடம்புக்கு வேண்டிய உணவையும் தோசம் தரக் கூடிய உணவையும் சேர்த்து தாறுமாறாக சாப்பிடுவது. அத்யஸனம் என்றால் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதாலேயே நோய்கள் அதிகளவில்



ஏற்படுகின்றன என்பதுதான் உண்மை.

விஷமாஸனம் என்றும் ஒன்று இருக் கிறது. அதாவது உணவை விஷமாகச் சாப்பிடுவது. எந்த நேரத்தில் சாப்பிடவேண்டுமோ அதை விட்டுவிட்டு அக்காலத்தில் சாப்பிடுவதே இதுவாகும்.

அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது, நிறைவாக சாப்பிடுவது அல்லது ஒழுங்கீனமாக உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவது ஆகிய மூன்று பழக்கவழக்கங்களையும் தவிர்க்க வேண்டும்.

ஆரோக்கியமாக உள்ளவருக்கு போசாக்குணவு எவ்வளவு அவசியமோ அதேபோல் நோயுற்ற நிலையில் பத்திய உணவு அவசியமாகின்றது. ஒருவர் நீண்டகால நோயால் பாதிக்கப்பட்டுள்ளபோது உணவு முறைகளை மாற்றி அமைத்து மருந்துகளை தவிர்ப்பதே சிறந்தது. நீரிழிவு, குடற்புண், மூலநோய், வாத நோய் போன்றவற்றுக்கு உணவு முறைகளை கடைப்பிடித்தல் சிறந்ததாகும்.

அக்னி, வாயு ஆகியவற்றுக்கு தரும் அளிக்கக் கூடிய உணவானது அன்னரசமாக மாறி அது உடலுக்கு புஷ்டியைத் தருவது மட்டுமல்லாமல் மனோபலத்தையும் பாதிப்பதால் சாப்பிடும் முறையை சிரத்தையுடன் செய்ய வேண்டும். மேலைநாட்டிலே சாப்பிடுவது ஓர் சமூக நிகழ்வாக மாறிவிட்டது. வெளி இடங்களில் கூடிப்பேசிக் கொண்டே சாப்பிடுவார்கள். ஆனால் எம் நாட்டில் சமயாசார நிகழ்வு (Ritual act) அமைதியாக இருந்து பரமாத்மாவை தியானித்து ஒவ்வொரு கவளத்தையும் தெய்வமாக மதித்து சாப்பிட வேண்டும். சாப்பிடும் போது முதல் கவளத்தை நெய் விட்டு கலந்து சாப்பிட வேண்டும். வயிற்றிலுள்ள அக்கினியை முதலில் நெய்விட்டு உத்தீபனம் செய்ய வேண்டும். கொழுப்புசத்து சேரக் கூடாது என்ற விழிப் புணர்ச்சி தேவைதான். ஆனால் உடலின் மிதமான அளவில் எண்ணெய் பசை இருக்க வேண்டும்.

இரைப்பையில் நான்கில் இரண்டு பகுதியில் அனைத்தையும் ஒரு பானத்தையும் திரும்ப வேண்டும். மற்றுமொரு பகுதியை வாயுவுக்கு விட வேண்டும். சாப்பிட முன்போ இடையிலோ குடிக்கக் கூடாது. இடையில் குடியேல் கடையில் மறவேல் என்பது முன்னோர் வாக்கு.

முற்காலத்தில் குடிநீரை நன்கு கொதிக்க வைத்து ஆறியதும் ஒரு மண் பானையில் இட்டு சுக்கு, துளசி இலை என்பவற்றை போட்டு மூடி வைப்பார்கள். இது பருகுவதற்கு இலேசாகவும் ஆரோக்கியத்தைப் பேணவும் உதவும்.

"நீர் கருக்கு மோர் பெருக்கி
நெய்யுருகி உண்பவர் தம்
பேரூரைக் கப்போமே பிணி"

என்ற பாடல் வரிகள் இங்கு நோக்கத்தக்கது. அதாவது நீரை நன்கு கொதிக்க வைத்து மோரை நன்கு நீர் விட்டு கரைத்தும் நெய்யை உருக்கியும் உண்டால் பிணி வராது என்பதாகும். சற்று இளஞ்சூடான நிலையில் அருந்தும் நீரை உஷ்ணோதகம் என்பர். இது ஜடராக்கினியை தூண்டும். பசியை விருத்தியாக்கல், ஆகாரங்களை நன்கு ஜீரணமடைய உதவுதல், சிறுநீரை தாராளமாக வெளியேறச் செய்தல், தொண்டை கோளாறு போக்குதல், பலமளித்தல் போன்ற நற்குணங்களாக கொண்டது.

பானங்களைக் குடிக்க ஒரு விசேட முறை உள்ளது. அதை அனுபானம் என்று கூறுவோம். மாப்பண்டம் சாப்பிட்டால் உஷ்ண ஜலம் சாப்பிட வேண்டும். கொழுப்புணவு உண்டால் குளிர்ஜலம் பருக வேண்டும். சாப்பிட்டதும் நீரில் தூயதேன் கலந்து சாப்பிட உடம்பு குறையும்.

சாப்பிட்ட உடனே சிரமமான வேலைகளையும் செய்யக்கூடாது. 45 நிமிடங்கள் வரை ஓய்வு எடுக்க வேண்டும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

உணவு என்பது போஷாக்குக்காக மட்டுமின்றி மனநிலைகளையும் நிர்ணயிக்கி ன்ற விடயம் என்பதால் கண்டிப்பாக கவனம் செலுத்த வேண்டும். ஒருவர் பால், நெய், கனி, கீரை, பருப்பு என்பவற்றை சரியான அளவில் சாப்பிட்டு வருவாராயின் அவரது மனநிலை அமைதியாக இருக்கும்.

அசுத்தமான, புளித்த, பழைய உணவுகளை உண்பவன் தாமஸ்கமாக இருப்பான். தாமஸிகம் என்றால் மந்தம் ஆகும். சுவை



கள் எல்லாம் பஞ்சபூதங்களின் சேர்க்கையே. அறுசுவைகளும் 2 பஞ்சபூதங்கள் சேர்ந்தவையே. ஆகவே அறுசுவைகள் எமது உடல் தாதுக்களையும் தோல்களையும் பாதிக்கின்றன. அவைகளை எமது உடல் பிரகிருத் திற்கேற்ப சாப்பிட வேண்டும். எனவே இச் சுவையுள்ள உணவுகள் கூடினும் குறையினும் நோய்களை ஏற்படுத்தும்.

உணவிலுள்ள சுவைகள் மனதின் முக்குணங்களை வளர்ப்பதிலும் அவசியமாகிறது என்பது புலனாகிறது. இனிப்பு சுவையும் குளிர்சுவையும் சாத்வீக குணத்தை வளர்க்கும். புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கசப்பு அலைகள் உஷ்ண வீரியமுள்ள உணவுகள் இரஜோ குணத்தை விருத்தியாக்கும்.

நன்கு சமைக்கப்படாத உணவு, 'புளிப்படைந்த உணவு என்பன ஏமோ குணத்தை விருத்தியடைச் செய்கின்றன. ஆகவே உணவானது ஆரோக்கிய வாழ்வுக்கு மருந்தாகவும் அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

பங்குனி மீன மாதத்தில் பிறந்தவர்களின் சிறந்த அறிஞர்களும் இலட்சியவாதிகளும் கலையே தெய்வமாகக் கருதி வழிபடும் தெய்வீகக் கலைஞர்களும் சிறந்து விளங்கி இருக்கிறார்கள். எனவே உங்களில் கவிஞர்களும் இருப்பார்கள். அழகில் சிறந்தவர்களும் இருப்பார்கள். அறிவிலிகளுங்கூட இருப்பார்கள்.

புவன இராசி சக்கரத்தில் 12 ஆவது விரய ஸ்தானமாக மீனம் அமைவதால் தேசப்பிரஸ்தம் ஆக வேண்டியவர்களும் சிறை செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு ஆட்படுவோர் சிலரும் இந்த மாதத்தில் இருப்பதுண்டு. மீன மாதத்தில் பிறந்தவர்களுக்கு தெய்வீக, ஆன்மீக சிந்தனைகளும் உள்ளத்தின் அடியாழத்தில் பதிந்திருக்கும் சூரிய வெளிச்சமும் குளிர்ந்த காற்றும் குளுமையான சுற்றுப் புறங்களையும் பெரிதும் விரும்பும் மனிதர்களில் பலர் மீன மாதத்தில் பிறந்தவர்களாகவே இருப்பார்கள்.

நீங்கள் நாகரிகமான நகரத்தில் வசித்தாலும் கிராம வாழ்க்கை என்றால் உங்களுக்கு பிரியம் அதிகம்.

நாட்டுப்புறங்களின்வயல்வெளிகளில் பசும் புல் தரைகளிலும் மலையோரங்களிலும் உலாவி வருவதை ஒரு சிறந்த ஆரோக்கியப் பொழுதுபோக்காக கருதுவீர்கள். உங்களில் பெரும்பாலோருக்கு கண்கள் கவர்ச்சிகரமாகவும் எப்போதும் எதையாவது எதிர்பார்த்து துடித்துக் கொண்டிருக்கும் ரப்பை துடிப்புடனும் காணப்படும்.

நீங்கள் உங்கள் சக்திக்கும் மிஞ்




சிய வேலைகளில் ஈடுபடுவீர்கள். அல்லது உங்கள் சக்திக்கும் விடயங்களைப் பற்றி கற்பனைகளையாவது கதைகளையாவது கண்டு கொண்டு அதன்படி வாழ வழி வகுத்துக் கொள்ள முனைவீர்கள்.

நடைமுறைச் செயல்களை உங்களுக்கு சாதகமாக கூடியவற்றில் மட்டுமே அதிக கவனம் செலுத்துவீர்கள். சுற்றுப் புறச் சூழலுக்கு ஏற்ற வகையில் நீங்கள் வாழ வேண்டிய வழிமுறைகளை வழிவகுத்துக் கொள்வீர்கள்.

சிற்சில சமயங்களில் மேக மண்டலத்தில் சஞ்சரிப்பதைப் போல தம் வாழ்வின் உயர்ந்த நிலையை அடைவதற்கு இயற்கையே தமக்கு சாதகமாகி தம்மை இயங்க வைப்பதாக கருதிக் கொண்டிருப்பீர்கள். எனவே, உறுதியான ஒழுங்கு முறைகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு இயங்குவோருக்கு உங்களின் போக்கும், செயலும் விழிப்பாகவும் விசித்திரமாகவும் தோன்றக் கூடும்.

உண்மை நிலைகளுக்கும் கற்பனை விசித்திரங்களுக்கும் எத்தனை மாறுபாடுகள் உண்டோ அத்தனை மாறுபாடுகளையும் உங்களில் பலர் தங்கள் வாழ்க்கையில் சந்திப்பார்கள். உங்களுடைய இலட்சியங்களும் பெரும்பாலும் நிரந்தரமானவையாக இராது. நீங்கள் மென்மையான உள்ளம் கொண்டவர்கள்.

எனவே சிறிய மகிழ்ச்சிக்குரிய விடயத்தையும் பெரிதாக கருதி மகிழ்வீர்கள். நீங்கள் நீடித்து தர்க்கவாதம் செய்ய முடியாதவர்களாகவும் தொடர்ந்து செயலாற்ற முடியாமல் சோர்வடைந்து விடக் கூடியவர்களாகவும் இருப்பதும் உண்டு. உங்களில் சிலருக்கு புரட்டாதி, கன்னி மாதத்தில் பிறந்தவர்களின் மனோபாவங்களும் குண இயல்புகளும் அமைந்திருப்பதுண்டு. நீங்கள் எப்போதுமே மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருப்பது என்பது அபூர்வமாக இருக்கும். நீங்கள் வருந்தும் சமயத்தில் சோகத்தில் ஓவிய வடிவமாகவே விளங்குவீர்கள்.

உங்கள் வாக்குச் சாதுரியத்தாலும் பார்வைக் குளுமையாலும் பிறரைக் கவர்ச்சியுற வைக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. மனிதாபிமானமும் அன்பும் தயையும் பரோபகாரம் செய்யும் குணமும் கூடவே குலுங்கும்.

கண்பார்வைக்கு கவர்ச்சியான விடயங்களை அவை காட்சிப் பொருட்களாயினும் காட்டு மிருகங்களாயினும் பறவைகளாயினும் மனிதர்களாயினும் அவற்றில் மனதைப் பறிகொடுத்து விடும் மனோபாவமும் ஏற்படும்.

உங்களுக்கு அழகான மென்மையான நேர்த்தியான விலை உயர்ந்த ஆடைகளையும் துணி மணிகளையும் அணிந்து கொள்வதில் ஆர்வம் அதிகமாக இருக்கும். உங்களுக்கு மிகச் சிறந்த நினைவாற்றல் அமைந்திருக்கும்.

உங்கள் நினைவுகளில் சிந்தனைகளிலும் செயலாற்றும் வேகத்தைவிட கற்பனைக் கதைகளில் வரும் கதாபாத்திரங்களைப் போல வாழ விரும்புவீர்கள். கதைகளைக் கண்டு அந்தக் கதைகளைப் போல வாழ்வு அமைய வேண்டும் என்று நினைப்பீர்கள். நீங்கள் பல அரிய சந்தர்ப்பங்களில் இழக்க நேரிட்டு விடுவதும் உண்டு.

நீங்கள் எதையும் நேரடியாக பேசவோ செய்யவோ மாட்டீர்கள். சுற்றிவளைத்துப் பேசுவதும் செய்வதும் உங்கள் வழக்கமாய் இருக்கும். வாழ்க்கையில் பலர் கண்டறியாதவற்றை காண வேண்டும் என்பதில் உங்களுக்கு ஆர்வம் அதிகமாக இருக்கும். நீங்கள் உண்மை அன்புக்காகவும் காதலுக்காகவும் உண்மையை நிரூபிப்பதற்காகவும் உங்களையே தியாகம் செய்து கொள்ளக்கூட தயாராகி விடுவீர்கள். புலனாகாத உண்மைகள், மர்மங்கள் இவைகளை அறிந்துகொள்வதில் உங்களுக்கு கவர்ச்சியும் விருப்பமும் இயல்பாக அமைந்திருக்கும். (தொடரும்)

## முஸ்லிம் மக்கள் தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

### நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கேள்வி

(கொழும்பு)

வடமாகாண சபை தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமாகாண முஸ்லிம்களின் நிலைப்பாடு தொடர்பாக தெளிவாக அறிவிக்க வேண்டுமென நல்லாட்சிக்கான மக்கள் இயக்க பிரதிநிதிகள் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்க பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவை யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று முன்தினம் சந்தித்துள்ளனர். இதன் போதே அவர்கள் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் உறுப்பினரும் காத்தான்குடி நகர சபை முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான பொறியியலாளர் எம்.எம்.அப்துல் ரஹ்மான் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தினை ஆளப்போகின்ற கட்சியாக வரவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடமாகாண முஸ்லிம்களின் நிலைப்பாடு தொடர்பாகவும் அங்குள்ள முஸ்லிம்களின் புனர்வாழ்வு, முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், முஸ்லிம்களின் காணி போன்றவைகள் தொடர்பாக தெளிவாக அறிவிக்க வேண்டுமென கோரியுள்ளோம் என்றார்.

இது தொடர்பாக கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களை சந்தித்து கலந்துரையாடிய பின் தெரிவிப்பதாக மாவை சேனாதிராஜா பதில் அளித்துள்ளார். (அ-2)



சுன்னாகம் போக்குவரத்து பொலிஸ் பிரிவினரால் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கு போக்குவரத்து தொடர்பான கருத்தரங்கு நடைபெற்று வருகின்றது. இதற்கமைய சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரியில் சுன்னாகம் பொலிஸ் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் சமீர கருணாரட்ண தலைமையில் கடந்த வாரம் குறித்த கருத்தரங்கு நடைபெற்ற போது.

## கலவரத்தை தடுக்கத் தவறிய பொலிஸ் அதிகாரி பதவி நீக்கம்

(கொழும்பு)

**நவுறுதீவில் புகலிடக் கோரிக்கையாளர்கள் முகாமில் ஏற்பட்ட கலவரத்தை தொடர்ந்து 400 புகலிடக் கோரிக்கையாளர்கள் பிளக்சொயில் சைட் என்ற புதியதொரு இடத்திற்கு மாற்றப் பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட இக்கலவரத்தைத் தடுக்கத் தவறியமைக்காக நவுறு தீவின் தலைமைப் பொலிஸ் அதிகாரி ரிச்சாட் பிரிட்டென் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.**

கடந்த இரண்டு தினங்களாக இவர்கள் எதுவித கூடாரங்களுமின்றி தங்கவைக்கப்பட்டதுடன் தற்காலிக கூடாரங்களை அமைக்கும் பணிகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டிருப்ப தாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் அவர்களை அத்தீவிலிருந்து மாற்றுவது தொடர்பான தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லையெனத் தெரிய வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட கலவரம் காரணமாக 60 மில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டிருப்ப தாக ஆரம்பகட்ட மதிப்பீடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. கலவரத்தை தடுக்கத் தவறியமைக்காக அவுஸ்திரேலிய பொலிஸ் திணைக்களத்தால் ஆமோதிக்கப்பட்டு நியமிக்கப்பட்ட நவுறுதீவின் தலைமை பொலிஸ் அதிகாரி ரிச்சாட் பிரிட்டென் நவுறுதீவின் பதில் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நவுறு தீவில் சட்ட விரோதப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்கவைக்கப்பட்டிருந்த முகாமில் கலவரம் ஏற்பட்ட அதே நேரத்தில் நவுறுதீவு அரசாங்கத்தின் இணையத்தளங்கள் பல சைபர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

கலவரம் இடம்பெற்று சுமார் 4 மணித்தியாலயங்களுக்கு அரச இணையத் தளங்கள் பல முடக்கப்பட்ட போதும் பின்னர் அவை வழமைக்குத் திரும்பியதாக அவுஸ் திரேலியா செய்திகள் தெரிவிக்கின்றன.

கலவரத்தின்போது 500 இற்கும் அதிகமானவர்கள் தப்பியோடியுள்ளதாகவும் கலவரத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் 100 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு விளக்க சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

## மரண அறிவித்தல்

### குமாரசாமி மனோன்மணி



நவாலியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி - மனோன்மணி 19.07.2013 அன்று சுவிஸில் காலமானார்.

இவர் அமரர் மு.குமாரசாமி அவர்களின் மனைவியும் (ஓய்வுபெற்ற விமான படை அதிகாரி), சிறிஸ்கந்தராசா, நிர்மலா, சியாமளா - சிறினிவாஸ் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

24.07.2013 அன்று சுவிஸில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயிலடி, சித்தன்கேணி.
(கண்ணா கிளினிக், அருகாமை)
தொ.பே: 0779412579

தகவல்:
அ.பிறேமரட்ணா
(பிறேம்)

(3449)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்துடன் தேர்தலை நடத்தினால் அரசுக்கு இறுதி ஊர்வலமாக அமையும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**இந்தியாவில் பொதுத்தேர்தல் நடைபெற்று முடியும் வரை 13 ஆவது திருத்தத்தில் கைவைக்க வேண்டாமென்ற சிவ்சங்கர் மேனனின் ஆலோசனைக்கமையவே அரசாங்கம் காணி, பொலிஸ் அதிகாரங்களை இரத்துச் செய்யாது வடமாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளது.இது இடம்பெற்றால் அதுவே அரசாங்கத்தின் இறுதி ஊர்வலமாக அமையும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரித்துள்ளது.**

அரசாங்கம் நாட்டைபற்றி சிந்திக்கவில்லை. பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் தலைமைப்பதவியே அரசாங்கத்திற்கு தேவைப்படுகின்றதென்றும் அவ்வியக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்பதாக பொலிஸ், காணி அதிகாரங்கள் இரத்துச் செய்யப்பட வேண்டு மென்பதே அரசாங்கத்திடம் நாம் முன்வைக்கும் கோரிக்கையாகும். ஆனால் அரசாங்கம் இதற்கு செவிசாய்ப்பதாக தெரிவில்லை.

மாறாக இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் மேனன் விரித்த வலையில் அரசாங்கம் சிக்கிக்கொண்டுள்ளது. அதாவது இந்தியாவில் அடுத்த வருடம் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

அது நடந்து முடியும் வரை 13 ஆவது திருத்தத்தில் இலங்கை அரசாங்கம் கைவைக்க கூடாதென்பதே மேனன் விரித்த வலையாகும்.

தேர்தலின் பின்னர் கூட்டமைப்பு மீண்டும் தனித் தமிழீழத்துக்கான விஸ்வரூபத்தை எடுக்கும்.

இங்கு வரும் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் குழுவுக்கு புதுமாத்தளனுக்கும் கிளிநொச்சிக்கும் செல்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கக்கூடாது. தடை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மேலும் மேலும் சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் அதிகரிக்கும்.(அ-2)

# ஆசியாவில் சக்திவாய்ந்த நாடு இலங்கை என்பதை உலகு உணரும்

(கொழும்பு)

30 வருட யுத்தத்தை முடித்து ஆசியாவில் சக்திவாய்ந்த நாடு இலங்கை என்பதை உலகுக்கு காட்ட பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடப்பதன் மூலம் சாத்தியமாகிறது.

இவ்வாறு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இம்மாநாடு இலங்கையில் நடப்பதன் மூலம் இலங்கையைப் பற்றி சர்வதேச மட்டத்தில் செய்யப்பட்டுள்ள தவறான பிரசாரங்கள் ஒழியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கொடிய பயங்கரவாதத்தைத் தோற்கடித்து இலங்கை பெற்ற அனுபவம் மூலம் முன்மாதிரிகள் உள்ளன.

துரித அபிவிருத்திக்கு உலகுக்கே முன்மாதிரி காட்டப்பட்டுள்ளது. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பதவிக்காலத்தில் அணிசேரா மாநாடு நடத்தப்பட்ட போதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

இம்மாநாடு மூலம் மத்திய கிழக்கு நாடுகளுடன் நெருங்கிய உறவுகள் ஏற்பட்டன. தொழில் வாய்ப்புக்களும் பொருளாதார மேம்பாடும் ஏற்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# நீதிமன்றத்தின் உத்தரவுகள் உதாசீனப்படுத்தப்படுகின்றன

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் உத்தரவுகளை உதாசீனம் செய்துள்ளதாக ஜே.வி.பி. கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மாத்தளையில் இடம்பெற்ற பாரிய மனித புதைகுழி தொடர்பாக விசாரணைகளின் போது மாத்தளை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை புலனாய்வுப் பிரிவினர் உரிய முறையில் அமுல்படுத்தத் தவறியுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பாரிய மனித புதைகுழியிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மற்றும் மண்டையோடுகள் தொடர்பில் ரேடியோ கார்பன் பரிசோதனை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் இதுவரையில் நீதிமன்றம் இந்த உத்தரவினை அமுல்படுத்தவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தங்களது முறைப்பாடுகளை செய்ய முடியும் என்ற விளம்பரமும் இன்னமும் பிரசுரிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

154 பேரின் உடல் எச்சங்கள் இந்த பாரிய மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது. (அ-2)

# நெடுஞ்சாலையை நிர்மாணித்தால் அரசியலில் இருந்து விலகுவேன்

(கொழும்பு)

வல்பொல பட்டுவத்தையூடாக அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்படமாட்டாது. அவ்வாறு நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டால் அரசியலிலிருந்து தான் விலகிக் கொள்வேன் என்று அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாரங்கொடபாலுவ மற்றும் வல்பொல பட்டுவத்தையூடாக நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள வடக்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வல்பொல கிராமத்தை சேர்ந்தவர்கள் புகையிரத தண்டவாளத்தை மறித்து நேற்றையதினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக குறித்த இடத்திற்கு வருகை தந்த அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் அந்த இடத்திற்கு வந்து கொண்டிருந்தபோது பிரதேசவாசிகள் புகையிரத தண்டவாளங்களில் டயர்களை எரித்துக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# அம்பாந்தோட்டையில் தேவையற்ற முதலீடுகள்

(கொழும்பு)

பிழையான காரணங்களுக்காக அம்பாந்தோட்டை வரலாற்றில் இடம்பிடித்துள்ளதாக ஜே.வி.பி கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கப்பல்கள் இல்லாத துறைமுகம், கிரிக்கெட் விளையாடாத சர்வதேச மைதானம், விமானங்கள் தரையிறங்காத விமான நிலையங்கள் என பல்வேறு வரலாற்று சாதனைகளை அம்பாந்தோட்டை படைத்துள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுமக்கள் பணத்தைக் கொண்டு இந்த விடயங்கள் செய்யப்படாமலிருந்தால் அதனைப் பற்றி கருத்திற்கொள்ளவேண்டியதில்லை என்ற போதிலும் இவை அனைத்துமே மக்களின் பணத்தினால் உருவாக்கப்பட்டவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


வரிப்பணத்தைக் கொண்டு இவ்வாறு செய்யப்படும் விரயங்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மெய்யான எதிர்க்கட்சியாக ஜே.வி.பி மட்டுமே திகழ்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும் மக்கள் இரண்டு கட்சிகளாக நோக்குகின்றனர் எனவும் உண்மையில் அவை இரண்டுமே ஒரு கட்சியாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# 31,01 ஆம் திகதிகளில் ஐ.தே.க வேட்புமனு

வடமேல், மத்திய , வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி அல்லது ஓகஸ்ட் முதலாம் திகதி கையளிக்கப்படுமென ஐ.தே.க. பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். மூன்று மாகாணங்களிலும் யானைச் சின்னத்தில் ஐ.தே.க தனித்துப் போட்டியிடும். வேட்பாளர் வேட்புமனுத் தாக்கல் பணிகள் 70 வீதம் பூர்த்தி அடைந்துள்ளன. முதலமைச்சர் வேட்பாளர்கள் பற்றி வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்படும்.நியமனக் குழு வேட்புமனுத் தாக்கல் பணியை பூர்த்தி செய்து வருகிறது. இந்த அட்டவனை எதிர்வரும் 26, 27 ஆம் திகதியளவில் பூர்த்தி பெறுமென்றும் செயலாளர் தெரிவித்தார். (அ-2)





வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பணிமனையினரின் ஏற்பாட்டில் புங்குடுதீவு`தாய்மார் கழகங்களினால் யா/புங்குடுதீவு றோ.க.த.க வித்தியாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட சுகாதார மற்றும் போசாக்கு கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வேலணை பிரதேச சபை தவிசாளர் சின்னையா சிவராசா கண் காட்சியினை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வினைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லி மலை



## ஆன்மீகம் 69

### அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

கஞ்சா இது சிவ மூலிகை. இது சில மருந்துகளின் மருந்தாக அமையும். ஆனால், இதை போதைக்காக உபயோகித்தால் மனிதன் தன்னை மறப்பான். அவன் மனம் நினைப்பதை உடல் செய்யாது. மொத்தத்தில் அவன் சுய கட்டுப்பாட்டையே இழப்பான்! இது முற்றும் துறந்த யோகிகளுக்கும் சித்தர்களுக்கும் மட்டுமே படைக்கப்பட்டது. ஆனால், இதை இன்று விஞ்ஞானத்தின் உதவியால் பல்வேறு வகையாக்கியதால் மனித குலத்தையே அழிக்க முயலும் விபத்துக்கள் அதிகரித்துவிட்டன. மேலும் திகைப்பூண்டு என்றுகேள்விப்பட்டிருப்பீர்கள். அது அடர்ந்த காடுகளில் தரையில் படர்ந்திருக்கும். அதை மனிதன் மிதித்துவிட்டால் அவன் மனம் பாதிக்கும். ஒன்றும் புரியாது- வழி அறியாமல் காட்டிலேயே சுற்றிச்சுற்றி வருவான் என்று பெரியோர்கள் கதை கதையாய்ச் சொல்வார்கள். இன்னொரு செடியை மிதித்துக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்தால் மதிய வெயிலில்கூட நட்சத்திரங்கள் தெரியும் என்பார்கள். ஆதலால் மூலிகைகளைப் பற்றி நல்ல திறமையான ஆசான் வழிகாட்டுதலின்றி மலையில் சேகரிக்கவோ, அதை வைத்து மருந்து செய்ய முயல்வதோ ஆபத்தை விலை கொடுத்து வாங்கும் செயலாகும். பொதுவாக மலைப்பயணங்களின் போது நான் சோர்வுள்ள போதெல்லாம் ஆசான் தலையாட்டிச் சித்தர் பெருமான் எனக்கு தொண்ணூறு



அன்னர் சித்தர் ராஜ்குமார் சுமாமி இலங்கையில் (கொழும்பு) யாகம் செய்தல். அவருடன் மாதாஜி ராதாவும் இலங்கை பக்தர்களும்

முலிகைகள் கலந்து ஒரு மூலிகை சஞ்சீவி பொடியை உண்ணுமாறு சிறு அளவில் எடுத்துக்கொடுப்பார். அதைக் கையேந்திப்பெற்று நான் அருந்துவேன். அந்தப் பொடி சாதாரணமானது அல்ல. ஞானப்பொடியாகும். அற்புதமான மணத்துடன் அருமையான சொல்லத் தெரியாத சுவையுடன் இருக்கும். இதை அருந்தியபின் நான் ஏகாந்தம் நாடிச்சென்று தியானத்தில் ஆழ்வேன். மனம் மெல்ல மெல்ல ஒருமைப்படும். ஒரே சிந்தனையில் திளைப்பேன். கண்களில் அற்புதமான காட்சிகள் தோன்றும். தெய்வீக உணர்வால் ஆட்கொள்ளப்படுவேன். அப்போது சில சமயங்களில் தியான நிலையிலேயே எழுந்து ஆடிப்பாடுவேன். இதை எங்களுடன் வரும் அன்பர்கள் கேலி செய்வார்கள். சினிமாக்காரரர் பயாஸ்கோப் காட்டுகிறார். நடிப்பில் சிவாஜியை மிஞ்சிடுவார் போலிருக்கே என்பார்கள். கள்ளிச் செடிகளுக்கிடையில் சில சமயம் நல்ல பூச்செடிகளும் முளைப்பதுபோல் அக்கூட்டத்தில் உள்ளவர்களின் ஒருசில நல்லவர்கள் என்னை தனிமையில் கண்டிப்பார்கள். ஏன்! இப்படிச் செய்கிறீர்கள். மற்றவர்கள் கேலி செய்கிறார்களே என்று வருந்துவார்கள். அவர்களிடம் நான் பெற்ற தெய்வீக உணர்வுகளை எடுத்துச்சொன்னால் அவர்களும் நம்பப்போவதில்லை. நடந்தது என் நினைவு தெரிந்து நிகழ்ந்த விடயங்கள் அல்ல! இப்படிப் புகழுக்காக நான் நடிக்கிறேன் என்றால் புகழை அள்ளித்தரும் திரையுலகை விட்டு வந்திருப்பேனா? சினிமா உலகின் உள்ளே சென்றுவிட்டால் சினிமாவில் நுழைந்தவன் அதைவிட்டு வேறு தொழில்செய்ய மாட்டான்! ஏன் என்றால் அவனுக்கு சினிமாவைத்தவிர வேறு எதுவும் தெரியாது.

தொடரும்



# ஒரு துப்பாக்கி, ஒரு மோதிரம்

# A GUN & A RING




**ஷங்காய்திரைப்படவிழாவில் சிறந்த நடிகர் என்ற பாராட்டைப் பெற்றுத் திரும்பியிருந்த பாஸ்கரன் தமிழ் ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வி...**

**இதுவரையில் நடித்து வெளியாகியுள்ள தமிழ்த் தேசியம் சார்ந்த குறும் படங்கள் பற்றி**

நான் இதுவரை நடித்த குறும்படங்கள் அனைத்துமே தமிழ்த் தேசியம் சார்ந்ததாகவே உள்ளன. அத்தோடு நான் இயக்கிய குறும்படங்களும் தமிழ்த் தேசியம் சார்ந்தாதாகவே இருக்கிறது. நான் எடுக்கும் குறும் படங்கள் ஏன் தமிழ்த்தேசியம் சார்ந்ததாக உள்




ளது என பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர். இது குறித்து என்னுடைய திரைப் படத்துறையில் உள்ள கலைஞர்களும் ஏனைய கலைஞர்களும் கேலியாகப் பேசியுள்ளனர். அதுமட்டுமல்லாமல், அது தான் உனக்கு வருமா என்று கூட பலர் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்கு நான் கூறிய பதில் நாங்கள் முதலில் எமது நாட்டுக்கும் எமது இனத்திற்கும் என் சார்ந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர்களுக்கும் எங்களின் கதைகளைப் பதிவாக்க வேண்டும். எங்களின் மக்களுடைய துன்பங்கள், இன்பங்களை பதிவாக்கிய பின்னரே, நான் பொழுதுபோக்குப் பற்றி சிந்திப்பேன். தற்போது இதனை ஒரு கடமையாகவே செய்ய நினைக்கின்றேன் என்பதாகும்.

**தற்போது நடித்திருக்கும் முழு நீள திரைப்படம் பற்றி**

இந்த A GUN& A RING திரைப்படத்தில் நடிக்க செல்வதற்கு முதல் எடுத்த முழுநீள திரைப்படம் தீரா நதி நீங்க

## ஈழத் தமிழர் அவலத்தை பதிவு செய்த, ஷங்காய் சர்வதேச திரைப்பட விழாவில் விருது பெற்ற தமிழ்த் திரைப்படம்

ளும் அறிந்திருப்பீர்கள் அத்திரைப்படத்திற்குப் பின்னர் நான் எடுக்கும் முழு நீளத் திரைப்படம் வஞ்சகம். அத்திரைப் படத்தின் அனைத்துக் கட்சிகளும் அமைக்கப்பட்டுவிட்டன. அது இன்று முற்று முழுதாக முடிந்து படத்தொகுப்பு வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. A GUN & A RING திரைப்படம் வெளிவரும். அனேகமாக A GUN & A RING திரைப்படம் இன்னும் பல விருது விழாக்களுக்கு செல்ல உள்ளது. அனேகமாக படக்குழுவினரின் தகவல்களை வைத்து சொல்கிறேன். அத்திரைப்படம் வரும் செப்டெம்பர், ஒக்ரோபர் மாதமளவில், மக்களின் பார்வைக்கு திரையிடப்படலாம்.

வெளியிடுகின்ற குறும்படங்கள் காலத்தின் தேவைகளாக உள்ளன.

நான் முதலில் குறிப்பிட்டதுபோல் பரிஸ், லண்டன் மற்றும் கனடாவில் நடைபெறுகின்ற குறும்பட விழாக்களை ஒட்டியே நாங்கள் குறும்படங்களை எடுக்கின்றோம். இதன்போது நான் தினமும் பார்க்கும் விடயங்கள், படிக்கும் தகவல்கள் போன்ற மக்கள் சார்ந்த விடயங்களை பதிவாக்கும் நோக்கோடு எடுத்துவைத்திருப்பேன். பின்னர் அதனை சந்தர்ப்பம் கிடைக்கும் போது படமாக எடுக்கிறேன். அதை நான் குறும்பட விழாக்கள் மற்றும் இணைய வாயிலாக வெளியில் கொண்டு வருகின்றேன். எனது மக்கள் சார்ந்த விடயங்களை எடுக்கும் உணர்வு தானாக வருகின்றது.

**கலைத்துறை ஆர்வம் பற்றி**

நான் யாழ். வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவன். எமது ஊரில் நாட்டுக் கூத்து மற்றும் நாடகக் கலைகளை எனது ஊரைச் சேர்ந்தவர்கள் செய்வது வழக்கம். அப்போது சிறுவயது முதலே இவற்றைப் பார்த்துப்பார்த்து எனக்கு இத்துறையில் ஆர்வம் ஏற்பட்டது. ஆனால், அதற்குரிய வாய்ப்புக் கிடைக்கவில்லை. பின்னர் இங்கு வந்து தமிழீழ இசைக் குழுவில் இணைந்து ட்ரம் வாத்திய இசைக்கலைஞனாக இருந்தேன். அது தான் இந்த கலைத்துறையில் எனக்கு ஆரம்பமாக இருந்தது. பின்னர் படிப்படியாக நடிப்புத்துறைக்கு அடி எடுத்துவைத்தேன். தற்போது என்னை இந்தளவிற்கு கொண்டு வந்துவிட்டுள்ளது. இதற்கு காரணமானவர்கள் "படலைக்குப் படலை" குழுவினரும் திரைப்படக் குழுவினரும்.

**தாயகத்தில் வாழ்கின்ற கலைஞர்களுடன் தொடர்புகள் உள்ளனவா?**

ஒரு சிலருடன் தொடர்புகளை வைத்துள்ளோம். ஆயினும் சரியான நேரம் அமையவில்லை. எங்களின் படைப்புக்களில் அவர்களை இணைத்துக் கொள்வதற்கு தற்போது இசைப்பிரியன் அவர்கள் இந்தியாவில் இருக்கின்றார். எனது நண்பர்கள் லண்டனில் தயாரித்த வாழ்க்கை என்ற திரைப்படத்தில் எனது இசை அமைப்பாளர் கஜிநாத் நடித்திருக்கிறாார. ஒரு குடும்பம் நடித்திருக்கிறது. அத்திரைப்படத்திற்கு இசைப்பிரியன் அவர்கள் இசை அமைத்துள்ளார். 5 பாடல்கள் உள்ளன. கடந்த மாதம் தான் அந்தப் படத்திற்கான ஒலிநாடா லண்டனில் வெளியிடப்பட்டது.

**ஈழத்துக் கலைஞர்கள் எடுக்கின்ற படைப்புகள் பொருளாதார ரீதியில் வெற்றிபெறாமைக்குக் காரணம்?**

தொடரும்

இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதியதொரு சமுதாயம் படைப்போம்!



தனது தலையில் பல வண்ண மலர்களைச் சூட்டிக் கொண்டு மஞ்சுளா அழகு பார்த்தாள். சற்று நேரம் தனது அழகை ரசித்தபின், பூக்கோலம் போட ஆரம்பித்தாள். வண்ண மலர்களைக் கொண்ட கோலம் போடும் கலையை அந்த கிராமத்திற்கு அறிமுகப்படுத்தியதே அவள் தான்!

அதற்குத் தேவையான மலர்கள் அனைத்தும் அவளுடைய அழகிய தோட்டத்தில் உருவானவைதான்! அந்தக் கிராமத்தில் முதன் முதலாக பூக்கோலப் போட்டி நடக்கவிருந்தது. கர்நாடக மாநிலத்தின் மேற்கு கடற்கரையோரமாக இருந்த நாகின் கோப்பா என்ற விழாவின் பூக்கோலப் போட்டியில் பங்கு பெற்று இருந்த மஞ்சுளா மிகுந்த ஆர்வத்துடன் கோலமிடத் தொடங்கினாள்.

மலர்கள் என்றால் எப்போதுமே மஞ்சுளாவிற்கு மிகவும் பிடிக்கும்.

**அம்புலிமாமா கதைகள்**

தன் தோட்டத்தில் பலவித வண்ண மலர்களைப் பயிரிட்டு மகிழ்ந்த அவளுக்கு, அந்த மலர்களைப் பயன்படுத்த நல்லதொரு வாய்ப்புக் கிட்டியிருந்தது.

தனக்கு மட்டுமன்றி, தன் கிராமத்து மகளிரின் வாழ்க்கையிலும் மறுமலர்ச்சியை உண்டாக்கிய பாக்குல் என்ற நகரத்துப் பெண்மணியை நன்றியுடன் நினைவு கூர்ந்த மஞ்சுளா, மும்முரமாக கோலம் போட ஆரம்பித்தாள். ஒருநாள் நண்பகல் நேரம், அந்த கிராமத்து மகளிர் வயலில் வேலை செய்துவிட்டு மதிய உணவிற்காக வீடு திரும்பியிருந்தனர்.

மஞ்சுளாவும் அவர்களுள் ஒருத்தி! அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே ஒரு செக்கு இருந்தது. கிராமத்தினர் சிலர் அதில் வேலை செய்து வந்தனர். செக்கினுள் கரும்புகளையிட்டு சக்கையாகக் கசக்கி சாறு பிழிவது அவர்களுடைய அன்றாட வேலை! கரும்புச்சாற்றைக் கொதிக்க வைத்து, வெல்லப்பாகு தயாரித்து, பீப்பாய்களில் நிரப்பப்படும்.


நாகின் கோப்பா கிராமத்தில் பழைய நாட்டுக் கரும்புகள் மட்டுமே பயிரிடப்பட்டு வந்தன. அந்த நாட்டுக் கரும்புகளில் எடுக்கப்படும் சாற்றில் இருந்து கிடைக்கும் சர்க்கரை குறைவு என்பதால், பெரிய ஆலைகள் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. ஒரு சமயம், நகரத்திலிருந்து ஒரு பெண்மணி நாட்டுக் கரும்புகளைத் தேடி நாகின் கோப்பா கிராமத்திற்கே வந்திருந்தாள்.

பெரிய அளவில் சர்க்கரைக்காகப் பயிரிடப்படும் புதிய கரும்புகளை விட, நாட்டுக்கரும்புகளே சுவையாக இருப்பதாகக் கூறினார். அந்தப் பெண்மணி செக்கு ஆலையில் இருந்து சற்றுத் தொலைவில் இளைப்பாறிக் கொண்டிருந்த கிராமத்துப் பெண்களை அணுகினாள்.



தன் பெயர் பாக்குல் என்று அறிமுகப்படுத்திக் கொண்டவர் அவர்களிடம் உரையாடத் தொடங்கினார்.

கிராமப்புறங்களில் பழங்காலத்தில் பயிரிடப்பட்டு வந்த பயிர்களின் மேன்மைகளை விளக்கியவர், தற்போது அதிக உற்பத்தியைக் கருத்தில் கொண்டு,



ரசாயன உரங்கள் போட்டு வளர்க்கப்படும் நவீனப் பயிர்களின் குறைபாடுகளைப் பற்றியும் விளக்கினார். அவர் ஏற்கனவே ஒருமுறை அந்த கிராமத்திற்கு வந்திருப்பதாகக் கூறினார்.

தன்னுடைய முதல் சந்திப்பில் தனது பண்ணையில் பயிரிடப்படும் தாவரங்களைப் பற்றிய விவரங்களை அடுத்த முறை கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றிருந்தார். அன்று அவர் வந்திருந்தது இரண்டாம் முறை! கையில் ஒரு பையுடன் வந்திருந்தவர் அதனுள்ளிருந்த புகைப்படங்களைக் கூடியிருந்த கிராமத்துப் பெண்களுக்குக் காட்டினார்.

அவர் காட்டிய படங்களில் பலவிதமான மூலிகைகள், கிழங்குவகைகள், காய்கள், பழமரங்கள், மலர்கள், இடம் பெற்றிருந்தன. அதைப் பார்த்த பெண்கள் பரபரப்படைந்தனர். "ஐயோ! ஈஸ்வரா!" என்று அங்கலாய்த்த வயதான கங்கம்மா, "இந்தக் குட்டிப் பாகற்காய்கள் இன்னும் கிடைக்கின்றனவா?" என்று கூறினாள்.

லாபத்தைக் கருத்தில் கொண்ட பல விவசாயிகள் அந்த வகைக்குட்டிப் பாகற்காய்களைப் பயிரிடுவதேயில்லை. "இந்தக் குட்டிப் பாகற்காய்கள் இன்றும் கிடைக்கின்றன. ஆனால், கடைகளில் அல்ல! விரும்பினால் உங்கள் தோட்டத்தில் நீங்களே பயிரிட முடியும்!" என்றார் பாக்குல்.

கிராமத்துப் பெண்களுக்குத் தெரிந்த பல்வேறு சாதிப் பாகற்காய்களை பாக்குல் குறிப்பிடச் சொன்னார். தங்களுக்குள் வெகுநேரம் விவாதம் செய்துவிட்டு, அவர்கள் சில சாதிகளைக் குறிப்பிட்டனர். அவை எட்டு சாதிகள் மட்டுமே! பாகற்காயிலேயே இயற்கையான சாதிகள் எட்டு உள்ளன என்றால் மற்றக் காய்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை இனங்கள் இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

லாபத்தை மட்டுமே கருதும் வியாபாரிகள் அதிக மகசூலைக் கொடுக்கும் சில இனங்களை மட்டுமே பயிரிடச் சொல்லி வாங்குகின்றனர். அவர்களை நம்பியிருக்காமல், உங்களுக்குத் தேவையானவற்றை நீங்களே உங்கள் தோட்டத்தில் பயிர் இட்டால் எத்தனை நன்றாக இருக்கும்" என்ற பாக்குல், "உங்கள் தோட்டத்தில் விளையும் காய்கறிகளை சுவைத்து மகிழுங்கள்.

எஞ்சியவற்றை விற்றுப் பணம் கூட சம்பாதிக்கலாம்!" என்றார். அவர் கூறியதைக் கேட்டு, கிராமத்துப் பெண்களிடையே உற்சாகமும், பரபரப்பும் ஏற்பட்டது. மஞ்சுளாவின் மனத்திலும் மாறுதல் ஏற்பட்டது. இயற்கை அளித்துள்ள பலவிதமான தாவரங்களையும் தன் வீட்டில் வளர்க்க வேண்டும் என்று எண்ணினாள்.



அவர்களுடைய உற்சாகத்தைக் கண்ட பாக்குல், "நீங்கள் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொள்ளலாமே! ஒவ்வொருவரும் தங்கள் தோட்டத்தில் உருவாகும் பயிர்களின் விதைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். இந்த முறையில் உங்களுக்கு ஒரே காயின் பல இனங்களின் விதைகள் கிடைக்கும்!" என்றார்.

அப்போது மஞ்சுளாவிற்கு ஓர் அபூர்வ யோசனை தோன்ற, அவள் "அக்கா! இப்படிச் செய்யலாமே! விதைத் திருவிழா என்ற ஒன்றைக் கொண்டாடலாம்! எங்கள் கிராமம் மட்டுமன்றி அக்கம்பக்கத்திலுள்ள கிராமங்களையும் பங்கேற்கச் செய்யலாம்! நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் தோட்டத்து விதைகளைப் பரிமாறிக்கொள்ள முன்வந்தால், ஒவ்வொருவருக்கும் அவர்களின் விருப்பத்திற்கேற்ப பலவிதமான விதைகள் கிடைக்கும்!

அந்த விழாவின்போது, விளையாட்டு, பாட்டு, நடனம், பூக்கோலம் போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்யலாம்!" என்றாள். பாக்குலின் கண்கள் வியப்பினால் விரிந்தன. "ஆகா! என்ன பிரமாதமான யோசனை" என்று மஞ்சுளாவின் யோசனையை வரவேற்க, கூடியிருந்த அனைவரும் உற்சாகத்துடன் வரவேற்றனர். வயதான கங்கம்மா கூட இளமங்கை போல் உற்சாகத்துடன் என்னால் நூற்றுக்கணக்கான விதைகளைக் கொண்டு வர முடியும்!" என்று கூவினாள்.

"அந்த விழாவிற்கு உங்கள் குழந்தைகளையும் கட்டாயம் அழைத்து வாருங்கள். சிறு வயதிலேயே தோட்டம் வளர்க்கும் கலையில் அவர்களுக்கு ஆர்வமும், ஆழ்ந்த அறிவும் ஏற்பட வேண்டும்" என்றார் பாக்குல். இவ்வாறு தொடங்கிய அந்த விழாவில் பல கிராமத்தினர் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

இளவயதில் தாங்கள் பார்த்து மகிழ்ந்து பின்னர் நினைவில் இருந்தே அகன்ற பல தாவரங்களின் விதைகளைக் காணும் வாய்ப்பு பல முதியவர்களுக்கு கிடைத்தது. மஞ்சுளா மிகுந்த ஆர்வத்துடன் தொடங்கிய பூக்கோலம் நிறைவு பெற்றது. நடுவர்களான பாக்குல், கங்கம்மா இருவரும் கோலப்போட்டியை பார்வையிட்டனர்.

இறுதியில் நடுவர்கள் தங்கள் தீர்ப்பை வழங்கும் நேரமும் வந்தது. "பூக்கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர் மஞ்சுளா" என்றுபாக்குல் அறிவித்ததும் கரகோஷம் விண்ணைப் பிளந்தது. மஞ்சுளா மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனாள். மேடைக்குச் சென்று பரிசை வாங்கிக் கொண்டு திரும்பிய மஞ்சுளா மனத்திற்குள் தன் ஆர்வத்திற்கு வடிகாலாக அமைந்த தனது தோட்டதயும், அதற்குத் தூண்டுகோலாக இருந்த பாக்குலையும் வாழ்த்தினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர அபிவிருத்தி குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும்

## கோத்தபாய சவால்

(கொழும்பு)

நகர அபிவிருத்தி தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் நிரூபிக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பின் அபிவிருத்தியை சுரண்டுவதாக யாராவது கருதினால் அவர்களைப் பற்றி பாராளுமன்றத்திலாவது எடுத்துக்கூறலாம்.

நகர அபிவிருத்தி என்று கூறிக் கொண்டு கோடிக்கணக்கான ரூபாய்களை ஏப்பமிடுபவர்கள் யார்? அப்படி யாராவது இருக்கிறார்களா? தெரிந்திருந்தால் பெயர்களை கூறாமலிருப்பது ஏன்?

அரசியல் இலாபம் கருதி கொழும்பு அபிவிருத்தியை வேகப்படுத்துவதை பொறுக்க முடியாத எதிர்க் கட்சிகள் போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன.

கொழும்பு அபிவிருத்திகள் ஒழுங்காகவும் முறையாகவும் திட்டமிட்ட முறையிலும் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார். அதில் எந்த முறைகேடுகள் நடைபெறுவதற்கும் ஒப்பந்தகாரர்களுக்கு பணச் சுரண்டல் செய்வதற்கும் இடம் வைக்கவில்லை.

கொழும்பு அபிவிருத்திக்கு பாதுகாப்பு படையினரிடமிருந்து கிடைக்கின்ற நேரடியான பங்களிப்பினால் பணம் சுரண்டுவதற்கு வழியேற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# 13 ஆவது திருத்தத்தை மாற்றுவது பாரிய சிக்கலை உருவாக்கும்

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது மாகாண சபை முறைகளில் பாரிய சிக்கலை ஏற்படுத்தும் என்று எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நீதித்துறை சார்ந்தவர்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்துடன் ஒப்பிடும் போது அதனை திருத்துதல் அல்லது இல்லாது செய்தல் என்பன அரசாங்கத்துக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்தின் கீழ் மாகாண சபைகளை நிர்வாகம் செய்வதில் மத்திய அரசாங்கத்துக்கு அதிகார ரீதியான எந்தப் பிரச்சினைகளும் இல்லை.

ஆனால், இதனை மாற்றி அமைக்க முற்படும் போது இது தொடர்பில் பாரிய பிரச்சினைகளை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# 13 ஆவது திருத்தத்தை விடவும் ஆபத்தானது போதைப் பொருள்

## பொதுபலசேனா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற போரின் போது உயிரிழந்தவர்களை விடவும் போதைப் பொருள் பயன்பாட்டினால் அதிகளவானவர்கள் உயிரிழப்பதாக பொதுபல சேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே, போதைப்பொருள் இல்லாதொழிப்பு நடவடிக்கைகளை பொதுபல சேனா அமைப்பு ஆரம்பிக்கவுள்ளதாக அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் பூமியாக மாற்றமடைந்துள்ள கொலன்னாவப் பிரதேசத்திலிருந்து இந்தப் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்.

போதைப்பொருள் வர்த்தகத்தின் பின்னணியில் முஸ்லிம் கடும்போக்காளர்கள் செயற்பட்டு வருகின்றனர். இதனால் 13 ஆவது திருத்தச்சட்டத்தை விடவும் ஆபத்தான பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும்.

ஷாரிய சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் பங்குச்சந்தையில் இயங்கி வருகின்றன. இது தொடர்பிலான தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டினை அடுத்து அரசு வீடு செல்லும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு அடுத்த மாதம் அரசாங்கம் வீட்டிற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மற்றுமொரு கேலிக் கூத்தை மேற்கொள்ளவுள்ளது. அந்தக் கூத்திற்கு பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வு என பெயரிடப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்த பின்னர் மகிழ்ச்சியாக இருக்கும் தருணத்தில் விருந்து வைத்தால் பரவாயில்லை.

ஆனால், அரச மருத்துவமனைகளில் மருந்து இல்லை. இந்த நாட்டு கல்வித் துறைக்கும் நாட்டின் வறுமையை இல்லாதொழிப்பதற்கும் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்படாத நிலையில் பொதுநலவாய மாநாட்டு கொண்டாட்டத்திற்கு பல கோடி ரூபாவினை அரசாங்கம் செலவிடுகிறது என்று அஜித் பீ.பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)




- 1567 -இசுக்காட்லாந்தின் முதலாம் மேரி பதவியில் இருந்து அகற்றப்பட்டாள். அவளது ஒரு வயது மகன் ஜேம்ஸ் மன்னனாக்கப்பட்டான்.
- 1911- பெருவில் மச்சு பிச்சு என்ற 15ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோட்டையை அமெரிக்க நாடுகாண் பயணி ஹிராம் பிங்கம் கண்டுபிடித்தார். இது பழைய இன்கா பேரரசின் தொலைந்த நகரம் எனக் கருதப்பட்டது.
- 1923 - கிரேக்கம், பல்கேரியா மற்றும் முதலாம் உலகப் போரில் பங்குபற்றிய நாடுகள் சுவிட்சர்லாந்தில் கூடி புதிய துருக்கியின் எல்லைகளை நிர்ணயிக்கும் உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.
- 1924 -பன்னாட்டு சதுரங்கக் கூட்டமைப்பு பாரிசில் அமைக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய, கனேடிய விமானங்கள் ஜேர்மனியின் ஹாம்பூர்க் நகரில் குண்டுவீச்சுத் தாக்குதலை ஆரம்பித்தன. நவம்பர் மாத இறுதி வரை இடம்பெற்ற இத் தாக்குதல்களில் 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1969 - அப்பல்லோ 11 பாதுகாப்பாக பசுபிக் கடலில் இறங்கியது.
- 1974-சைபிரசில் துருக்கியரின் படையெடுப்பின் பின்னர் சைபிரசின் இராணுவ அரசு கவிழ்க்கப்பட்டு, நாட்டில் மக்களாட்சி மீளமைக்கப்பட்டது.
- 1991 - இந்திய அரசு தனது புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தது.


பிறப்புகள்

- 1802 -அலெக்சாந்தர் டுமாஸ், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1870)
- **1932 - தாமரைத்தீவான், ஈழத்து எழுத்தாளர**

இறப்புகள்

- 1848 -மார்ட்டின் வான் பியூரன், ஐக்கிய அமெரிக்காவின் 8ஆவது குடியரசுத்தலைவர் (பி. 1782)
- 1974 - ஜேம்ஸ் சாட்விக், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1891)

### தாமரைத்தீவான் (ஈழத்து எழுத்தாளர்)



தாமரைத்தீவான் என்ற புனைபெயர் கொண்ட "சோமநாதர் இராசேந்திரம் இலங்கை திருகோணமலையைச் சேர்ந்த எழுத்தாளர், கவிஞர். பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் படைத்துள்ளார்.

திருகோணமலையின் தென்கிழக்கிலே தாமரைவில் என்ற சிற்றூரில் சோமநாதர் - முத்துப்பிள்ளை தம்பதியினருக்கு ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தவர்.

1952 இல் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் படித்து பயிற்சி பெற்ற ஆசிரியரானார். ஆரம்பத்தில் திருகோணமலை யோசப் கல்லூரியிலுள்ள (1954), பின்னர் பதுளை கந்தே கெதற (1955 முதல்), கந்தளாய் (1961முதல்), ஈச்சந்தீவு (1963 முதல்) பின்னர் திருகோணமலை உப்பாறு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை (1968) ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார்.


இளம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். 1956 இல் சுதந்திரன் பத்திரிகையில் இவரது முதலாவது கவிதை பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கவிதைகளை எழுதினார். திருமலை மாவட்டத்தில் பல கவியரங்குகளில் கவிதை பாடி சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் அறியப்பட்டார்.

2001 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு நடத்திய தமிழ் இலக்கிய விழாவில் தாமரைத்தீவான் ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இலங்கை அரசாங்கத்தின் கலாசார அமைச்சு 2005 ஆம் ஆண்டில் கலாபூசணம் விருது வழங்கிக் கௌரவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி: மனிதமேம்பாட்டின் பாதையா அல்லது அடக்குமுறையின் கருவியா...?

பேராசிரியர் என். சண்முகரத்தினம்




அரசின் பாதுகாப்புமயமாக்கலை ஆட்சியாளர் நியாயப்படுத்தப் பயன்படுத்தும் தேசிய இறைமை, பிரிவினைவாத ஆபத்து போன்ற கருத்தியல் ரீதியான திரைகளுக்குப் பின்னால் உள்ள, யதார்த்தங்களைப் பார்ப்பது அவசியம். அரசின் பாதுகாப்புமயமாக்கல் (தேசியபாதுகாப்பு அரசு) என்பது சிவில் சமூகத்தை அரசின் பலாத்கார கருவிகளால் கட்டுப்படுத்துவது அல்லது நசுக்குவதாகும். இந்தக் கடும்போக்கு வடக்கு கிழக்கில் மட்டுமன்றி சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் தெற்கிலும் பலப்பட்டுவருவதைக் காணலாம். அங்கே தொழிலாளர்களின் மற்றும் நடுத்தர வர்க்க ஊழிய உழைப்பாளர்களின் வாழ்வாதாரத் தேவைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கான தொழிற்சங்க ரீதியான கூட்டுச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கு ஆட்சியாளர், அரசின் பலாத்கார கருவிகளை மட்டுமல்ல அரசியல்வாதிகளின் பாதாள உலக பயங்கரவாதத்தையும், பயன்படுத்தி வருகின்றனர். உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவும், நீண்ட காலமாக ஸ்தம்பித்து இருக்கும் *மெய்ஊதியமும்,* சகல இனங்களையும் சார்ந்த உழைக்கும் வர்க்கங்களின் மனித நன்னிலையை மோசமாகப் பாதித்திருக்கும் நிலையில் தொழிற்சங்க உரிமைகள் நசுக்கப்படுகின்றன.

பெரும்பான்மை இனத்தைப் பொறுத்தவரை சிவில்சமூகம் அரச பலாத்காரத்தின் அடக்குமுறைக்குப் பலியாக்கப்படும் நிலை ஒரு முக்கிய செய்தியைச் சொல்கிறது. அதாவது, பெரும்பான்மை இன மக்களை சிங்கள பௌத்த பேரினவாத கருத்தியலின் *மேலாட்சியால்* மட்டும் வழமை போல் கட்டியாள்வது கடினமாகி விட்டது. சிவில்சமூகத்தில் கருத்தியலின் மேலாட்சி எனும் *மிருதுவான அதிகாரசக்தி*யினால் சிங்கள மக்களில் பெரும்பான்மையோரின் சம்மதத்தை எல்லா சந்தர்ப்பங்களிலும் இன்றைய அரசாங்கத்தினால் பெறுவது சுலமல்ல. இதனால், அரசின் *வன்மையான அதிகாரத்தில்* ஆட்சியார்கள் கூடுதலாகத் தங்கியிருக்கியிருக்கும் நிலையைக் காண்கிறோம். அதேவேளை சிங்கள மக்கள் மீதான கருத்தியல் ரீதியான மேலாட்சியினை தக்கவைக்க ஜாதிக ஹெல உறுமய, பொதுபல சேனா, வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி போன்ற அமைப்புக்களையும் தமக்கு ஆதரவான ஊடகங்களையும் ஆட்சியாளர் பயன்படுத்துகின்றனர்.

நீண்டகாலமாக ஆளும் கட்சியினர் பெரும்பான்மை இனத்தின் பரந்த சமூகப் பிரிவினரான குட்டிப்பூர்சுவாப் பின்னணியைக் கொண்ட நடுத்தர, கீழ்நடுத்தர மட்டங்களின் அரசியல் ஆதரவையும் விசுவாசத்தையும் தக்க வைப்பதற்கு அரச நிறுவனகளுக் கூடாகவும் அரச வளங்களைப் பயன்படுத்தியும் சலுகைகளை அவர்களுக்கு வழங்கி வந்தனர்.

குறிப்பாக அரச நிறுவனங்களிலும் அரசினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில், வேலை வாய்ப்புக்கள், குடியேற்றத்திட்டங்களில் நிலப்பங்கீடுகள் போன்றவை, அரசியல் மயப்படுத்தப்பட்ட இத்தகைய சலுகைகள், தமிழ்பேசும் சமூகங்களின் சில பகுதிகளுக்கும் கிடைத்தது உண்மையெனினும் அவற்றின் கொள்கை ரீதியான நடமுறை பெருந்தேசியவாத அரசநிர்மாணத்துக்கு உதவுவதையே நோக்காக கொண்டிருந்தது.

அரசாங்கத்தை அமைப்பதற்கு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பங்காளர்களையும் பெறுவதற்கு இந்தச் சலுகைகளை ஐக்கிய தேசியக் கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் தலைமைகள் மாறிமாறி பயன்படுத்துவதும் வழக்கமாகிவிட்டது.

1977இல் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் நவதாராளவாதக் கொள்கை அமுலுக்கு வந்தபோதும் பல அரச கூட்டுத்தாபனங்கள் பாரியளவிலான நட்டம், நிதியிழப்பு ஆகியவற்றுக்கு தொடர்ச்சியாக உள்ளாகியும் இன்றுவரை தனியுடமையாக்கப்படாதிருப்பதை இந்தப் பின்னணியிலேயே பார்க்கவேண்டும்.

**இலங்கை அரசு ஒரு அபிவிருத்தி அரசா? தோற்றங்களும் உள்ளடக்கங்களும்**

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இலங்கை அரசு ஒரு அபிவிருத்திசார் அரசாக மாறி வருவதாகச் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். ஆட்சியாளரும் இலங்கை ஆசியாவின் அதிசயம் எனும் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளனர். இதற்கு ஆதரவாக நாட்டின் பல பாகங்களிலும் பாரிய கட்டுமான திட்டங்களையும், மத்திய வங்கி வெளியிடும் பொருளாதார வளர்ச்சி வீதப்புள்ளி விபரங்களையும் பலர் காட்டுகின்றார்கள். உட்கட்டுமானத் திட்டங்கள் பலவற்றை நாம் நேரடியாகப் பார்க்கின்றோம். புதிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கிறோம்; உண்மைதான். மத்திய வங்கியின் புள்ளிவிபரங்கள் கேள்விக்கிடமானவை என விபரம் அறிந்தவர்கள் கருதும்போது, இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதென்பதும் உண்மைதான். முன்பைவிட ராஜபக்ஷ ஆட்சியில் அரசின் பொருளாதார ரீதியிலான ஈடுபாடுகள் அதிகம் என்பதும் உண்மைதான். இவற்றை மட்டும் வைத்து இலங்கை அரசு ஒரு அபிவிருத்தி அரசு என்ற முடிவுக்கு வருவது அவசர முடிவென்பதே எனதுகருத்து.

சமீபத்திய தசாப்பங்களில்-அபிவிருத்தி அரசு எனும் கோட்பாடு 1960 களிலிருந்து துரித முதலாளித்துவ அபிவிருத்தியைப் பெற்ற கிழக்காசிய நாடுகளின் (குறிப்பாக தென்கொரியா, தைவான், ஹொங்கொங், சிங்கப்பூர்) அரசுபற்றியதாகும். ஜப்பானின் அபிவிருத்தி வரலாற்றின் மாதிரியைத் தொடர்ந்து, இந்த கிழக்காசி நாடுகளின் நவீனமயமாக்கலில், அரசு ஒரு பாரிய தலைமைத்துவப் பங்கினை வகித்தது. கிழக்காசிய அபிவிருத்தி அரசு பற்றி, பெருந்தொகையான ஆழ்ந்த ஆய்வுகள் வெளிவந்துள்ளன. பிரசுரிக்கப்பட்ட பல பிரபல்யமான ஆய்வுகளின் உதவியுடன் கிழக்காசிய அபிவிருத்தி அரசின் அடிப்படைத் தன்மைகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

நாட்டின் முதலாளித்துவ மாற்றம் பற்றிய திடமான பார்வையையும் ஆலைத்தொழில் மூலதனத்தின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கும் நிலைப்பாட்டையும் கொண்ட ஒரு ஆளும் கூட்டு அரசியல் அதிகாரத்தை பெற்றிருக்க வேண்டும். நீண்டகால பொருளாதார கொள்கைகளை குறிப்பிட்ட தனியாரின் நலன்சார்ந்த தலையீடுகளின்றி துறைசார் நிபுணர்களின் உதவியுடன் வகுக்கும் சுதந்திரத்தைக் கொண்ட அரசு.

உற்பத்தித் திறனை தொடர்ச்சியாக விருத்திசெய்யும் நோக்கில் தொழில் நுட்பத்தினை உள்வாங்குதல் மற்றும் மனித மூலதனத்தின் தொடர்ச்சியான வளர்சிக்கு முன்னரிமை கொடுக்கும் அரசு.

தொழிலாளர் வர்க்கத்தின் கூட்டுச் செயற்பாடுகளையும் ஜனநாயக சுதந்திரங்களுக்கான அமைப்புக்களையும் நசுக்கும் அதேவேளை தொழிலாளரின் உற்பத்தித்திறன் வளர்ச்சிக்கேற்ப மெய் ஊதியத்தை சகல துறைகளிலும் உயர்த்தும் கொள்கையை அமுலாக்க வல்ல அரசு.

நீண்டகால கடன் மற்றும் விசேட மானியங்கள் போன்றவற்றை வழங்கி உள்நாட்டு முதலாளி வர்க்கத்தின் உருவாக்கத்திற்கு உதவும் வகையிலான அரச பொருளாதார முதலீடுகள், உதராணத்தற்கு- நீண்டகாலப் போக்கில் அதிக இலாபம் தரக்கூடிய பாரிய ஆலைத் தொழில் உற்பத்தியில் அரசு முதலீடு செய்து, அது இலாபம் தரத்தொடங்கும்போது தனியுடமையாளருக்கு விற்றல்.

பொருளாதாரத் திட்டமிடல், ஜப்பானிலிருந்து தென்கொரியா, தைவான் வரை கிழக்காசிய அரசுகளின் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது. முதலாளித்துவத்தின் விருத்திக்கு திட்டமிடல் அவசியமில்லை எனும் சந்தை அடிப்படைவாதக் கருத்தினை மறுதலிக்கும் நடைமுறையாக இது இருக்கிறது. இந்தக் கிழக்காசிய நாடுகளில் நீண்டகாலமாக ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டன அல்லது கட்டுப்படுத்தப்பட்டன. அதேவேளை, உற்பத்தி சக்திகள் தொடர்ச்சியாக முன்னேறின. தொழிலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அறிவாளர்கள் ஜனநாயக உரிமைகள் கோரிப் போராட்டங்கள் நடத்தினர். இந்தப் போக்குகள் தென்கொரியாவில் மிகவும் பலமடைந்தன. இன்று அங்கே காணப்படும் ஜனநாயக உரிமைகள், இத்தகைய போராட்டங்களினதும் ஆளும் வர்க்கம் எதிர்கொண்ட அரசியல் நிர்ப்பந்தங்களினதும் விளைவுகளாகும். சீனாவின் துரிதமான முதலாளித்துவப் பயணத்தை கிழக்காசிய மரபிலே புரிந்துகொள்ளல் முக்கியம். சீனாவின் அரசு ஒரு அபிவிருத்தி அரசு எனலாம் ஆனால், சீனாவின் நெருங்கிய நட்பை பெற்றிருப்பதாலோ அல்லதுதொடர்ச்சியாக சீனாவிடம் பெரும்கடன்களை சுலபமாக பெறக்கூடிய நிலையில் இருப்பதாலோ மகிந்த ராஜபக்ச குடும்பத்தினால் கட்டுப்படுத்தப்படும் இலங்கை அரசு அபிவிருத்தி அரசு ஆகிவிடாது.

மேற்கூறியவற்றில் இலங்கை அரசிடம் இருக்கும் ஒரு பண்பு, தொழிலாளர் வர்க்கத்தையும் ஜனநாயக உரிமைகளையும் நசுக்குவதாகும். இது அடக்குமுறைத் தன்மை கொண்ட எல்லா அரசுகளுக்கும் பொதுவான பண்பு. இன்றைய நவதாராளவாத உலக சூழ்நிலையில் ஒரு அரசை அபிவிருத்தி அரசாக சீரமைப்பது சுலபமல்ல. அதே வேளை, இலங்கையில் உள்நாட்டு நிலைமைகளைப் பார்க்கும்போது அரசின் நடத்தை அபிவிருத்தி அரசின் தன்மைகளுக்கு மாறான போக்குகளையே காட்டுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ரீதியில் அதிகூடிய புள்ளி பெற்று சாதனை

அக்கரைப்பற்றைச்சேர்ந்த கே.எம். அகீல் மொஹமட் (வயது 16) CIMA- Enterprise Strategy பரீட்சையில் சர்வதேச ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதல் மாணவனாக சித்தியடைந்து அதற்கான பரிசினையும் அண்மையில் பெற்றுக் கொண்டார்.

சர்வதேச ரீதியாக 4 ஆயிரத்து 990 பரீட்சார்த்திகள் தோற்றிய மேற்படி பரீட்சையில் வயதில் குறைந்த முதல் மாணவன் என்ற பெருமையை இவர் பெற்று சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

இவர் தனது ஆரம்ப, இடை நிலை கல்வியை மருதானை ஏசென். ஜோசப் கல்லூரி, பொன்ட் சர்வதேச பாடசாலையிலும் உயர் கல்வியை நுகேகொட லைசியம் சர்வதேச பாடசாலையிலும் கற்றார்.

லண்டன் ரோபர்ட் கார்டன் பல்கலைக்கழகத்தில் Top CIMA இறுதியாண்டில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார். (அ-2)

# ஐ.தே.கட்சி ஒருபோதும் வெற்றி பெறப்போவதில்லை

## அமைச்சர் பவித்ரா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஆதரவளித்த ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் மாகாண சபைத்தேர்தலில் வெற்றி பெற முடியாது என அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கினிகத்தேன பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இம்முறை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் மேலும் வலுவிழக்கும். பிரபாகரனுக்கு பந்தம் பிடித்த ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டை ஒப்படைக்க எவரும் தயாரில்லை.

மஹிந்த சிந்தனையே இந்த நாட்டு சாதாரண மக்களின் வாழ்க்கையாக அமைந்துள்ளது.

நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்து மக்களுக்கு நலன்களை வழங்கிய மிக முக்கியமான கொள்கையாக மஹிந்த சிந்தனையை குறிப்பிட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 13 ஆவது திருத்தம் குறித்து அரசாங்கத்திற்குள் நெருக்கடி

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஆளும் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கெக்கிராவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சியின் முரண்பாட்டு நிலைமை அம்பலமாகும்.


இத்திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் அரசாங்கத்தின் இரண்டு அணிகள் உருவாகியுள்ளன.

இதனால் அரசாங்கம் பாரிய நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 13 ஆவது திருத்தத்தில் உரிய நேரத்தில் கைவைப்போம்

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

(கொழும்பு)



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதை அரசாங்கம் கைவிடவுமில்லை. அந்த முயற்சியிலிருந்து அரசாங்கம் பின்வாங்கவுமில்லையென ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.


13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளின் சட்டத் தேவைகள் குறித்து அவதானமாக ஆராய்ந்து வருகின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் அமைந்துள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களின் தன்மை மற்றும் அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டத் தேவைகள் என்பன தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றோம். உரிய நேரத்தில் தேவையான திருத்தங்களை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் கூறினார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள முயன்ற அரசாங்கம் இந்தியாவின் கோரிக்கையை அடுத்து அந்த முயற்சியை கைவிட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளமை குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-2)

# விக்னேஸ்வரனின் நியமனத்தால் நாடு ஒருபோதும் பிளவுபடாது

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வட மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளராக ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளமையின் காரணமாக நாடு பிளவுபடும் என்று தென்னிலங்கையில் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை என்று மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

வடமாகாண சபைத் தேர்தல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இந்த விடயம் குறித்து அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

விக்னேஸ்வரனின் வரலாறு, குடும்பப் பின்னணி மற்றும் கல்விப் பின்னணி ஆகியவற்றைப் பார்க்கும் போது அவர் ஒருபோதும் இன வாதத்துக்கு அடிபணியமாட்டார் என்பது தெளிவாகின்றது. ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாண சபையின் முதலமைச்சராக வருவதன் மூலம் ஒருபோதும் நாடு பிளவுபடமாட்டாது.

தமிழ் மக்களின் கோணத்திலிருந்து பார்க்கும்போது அவர் ஒரு மத்தியஸ்தமான மனிதராக இருக்கின்றார்.

அவரின் நேர்காணல்களை நான் அண்மையில் வாசித்துப் பார்த்தேன். தமிழ் மக்களின் ஜீவனோபாய மற்றும் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்பதே அவரின் நோக்கமாகும். மாறாக அரசியல் போராட்டத்தை கட்சி முன்னெடுக்கும் என்பதே அவரின் நிலைப்பாடாகவுள்ளது.

சி.வி.விக்னேஸ்வரன் கொழும்பில் பிறந்து வளர்ந்தவர். சிங்கள சமூகத்துடன் ஈடுபாட்டுடன் செயற்படுகின்றார். அவரின் குடும்பமும் சிங்கள மக்களுடன் உறவு வைத்துள்ளது.

அந்த வகையில் விக்னேஸ்வரனின் வரலாறு, குடும்ப பின்னணி மற்றும் படிப்பு ஆகியவற்றை பார்க்கும்போது அவர் ஒருபோதும் இன வாதத்துக்கு அடிபணியமாட்டார் என்பது தெளிவாகின்றது.

அதனால் அவரின் வருகையினால் நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று தென்னிலங்கையில் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டே மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்று விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இணைந்து செயற்பட அவர் எந்தளவு தூரம் ஆர்வமாக இருக்கின்றார் என்பதும் தெளிவாகின்றது என்றார். (அ-2)

# 15 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் ஆனையிறவில் புகையிரத நிலையம்

(கொழும்பு)

ஆனையிறவுக்கான புதிய புகையிரத நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

23 வருடங்களின் பின்னர் 15 மில்லியன் ரூபா செலவில் இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நிதியுதவி மூலம் சகல வசதிகளுடன் கூடிய புதிய புகையிரத நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இன்றைய நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி புதிய புகையிரத நிலையத்திற்கான நிர்மாணப் பணிகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

யுத்தம் காரணமாக சேதமடைந்த வட பகுதிக்கான புகையிரதப் பாதை புதிதாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்ற நிலையில்சுமார்23 வருடங்களுக்கு பின்னர் முதற்தடவையாக ஆனையிறவுக்கான புகையிரத நிலையம் புதி தாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

வட பகுதி மக்களின் நலனை கருத்திற் கொண்டு கிழக்கு உட்பட எட்டு மாகாணங்களிலுள்ள பாடசாலை மாணவ, மாணவிகள், ஆசிரியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட சுமார் 15 மில்லியன் ரூபா செலவிலேயே இந்த புதிய புகையிரத நிலையம் நிர்மானிக் கப்படவுள்ளது.

ஆனையிறவு புகையிரத நிலையம் அமைந்திருந்த அதே இடத்திலேயே புதிய புகையிரத நிலையமும் நிர்மாணிக்கப்படவுள்ளது என்று தெரிவித்த அவர் இவ்வாண்டு இறுதிக்குள் அதன் நிர்மாணப்பணிகள் நிறைவடையவுள்ளன என்றார். (அ-2)

# தேவையின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு வேண்டும்

## இதையே இந்தியா விரும்புகிறது-கம்மன்பில

(கொழும்பு)

தங்களது தேவைகளின் அடிப்படையில் அதிகாரம் பகிரப்பட வேண்டுமென இந்தியா கருதுவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

இந்திய நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இலங்கையில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ள வேண்டும் என கருதப்படுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகக் கடுமையான சுதந்திரப் போராட்டத்தின் நன்மைகளை அனுபவிப்பதில் தடைகள் தொடர்ந்தும் நீடித்து வருகின்றன.

1987 ஆம் ஆண்டு இந்திய- இலங்கை உடன்படிக்கையின் பின்னரே இந்தியா இலங்கை விவகாரங்களில் கூடுதலாக தலையீடு செய்து வருகின்றது.

இலங்கை சுதந்திர நாடு என அறிவிக்கப்பட்ட போதிலும் இந்தியா பல்வேறு உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைத்து வருகிறது.

வெளிநாட்டு கப்பல்கள், வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவு தொடர்புகள், வெளிநாட்டு வானொலிச் சேவையொன்று ஆரம்பித்தல் போன்ற பல்வேறு விடயங்களுக்கு இந்தியாவின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

மாகாண சபை முறைமையை எதிர்ப்பதும் தேர்தலில் போட்டியிடுவதும் இரண்டு வேறுபட்ட விடயங்களாகும் என அவர் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதேவைப் பூர்த்தியே யாழ். மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரே வழி

(நேற்றைய தொடர்ச்சி...)

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டத்தில் ஒன்பதாம் அட்டவணையில் நிரல் 1 என்ற மாகாண சபை நிரலில் (மாகாண சபைக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நிரல்) பின்னிணைப்பு 2 என்ற காணியும் காணிக் குடியேற்றமும் என்ற தலைப்பின் கீழ் காணியானது பின்வரும் விசேட ஏற்பாடுகளுக்கமைய மாகாண சபை விடயமாக இருத்தல் வேண்டும் எனச் சொல்லப்பட்டு (பின்வரும் விசேட ஏற்பாடுகளாக) 2 ஆம் பந்தியில் மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்ற தலைப்பில் 2:1 பிரிவில் அத்தகைய செயற்றிட்டங்கள்

(அ) அம்மாகாணத்திற்குள்ளாக அரசினால் ஆரம்பிக்கப்பட்டனவும் ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களுக்கூடாகப் பாயும் ஆறுகளிலிருந்து பெறப்பட்ட நீரை பயன்படுத்துவனவுமான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கும்.

(ஆ) மாகாணத்துக்கு வெளியேயுள்ள நீர்த்தொகுதிகளிலிருந்து திசை திருப்புவதன் மூலம் பெற்று நீரைப் பயன்படுத்தும் மாகாணத்துக்குள்ளாக இருக்கும் நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தி திட்டங்களை உள்ளடக்கும்.

(இ) மகாவலி அபிவிருத்தித் திட்டங்கள் போன்று முக்கிய இடப்பரப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்குள் வரும் எல்லாத் திட்டங்களையும் உள்ளடக்கும் எனக் கூறி 2:2 பிரிவில் இச் செயற்றிட்டங்கள் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும் எனக் கூறுகின்றது.

ஆகையால் யாழ்.குடாநாட்டுக்கு நீரை இரணைமடுக் குளத்திலிருந்து கொண்டு வருவதற்கு புறப்பட்டு கடைசியில் கிளிநொச்சிக் காணிகளில் இரணைமடுக் குளத்தின் கீழுள்ள கணிசமான காணிகளை மத்தியின் நிர்வாகத்திற்குள் போகச் செய்தவர்களாகி விடுவோம். இது பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக வந்த கதையாகிவிடும்.

### உள் நோக்கத்தோடு அரசியல் செயற்பாடுகள்

ஆளும் கட்சிகள் திட்டங்களைத் தயாரிக்கும் போது பல உள் நோக்கங்களையும் இரகசியமாக வகுத்து வைத்துக்கொண்டு செயற்படுவார்கள் என்பது யூ.என்.பியின் முதல் தலைவர் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா எவ்வாறு வடகிழக்குப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை மிகவும் சாதுரியமாகவும் தந்திரமாகவும் பெரிதும் அலட்டிக் கொள்ளாமலும் உருவாக்கிச் சாதித்ததை அறிவோம். இது பழைய வரலாறு. அச் செய்கையினால் கிழக்கில் முஸ்லிம்களின் பாரம்பரிய அம்பாறைப் பிரதேசம் அரைக்கரைவாசி சிங்களப் பிரதேசமாக மாறுவதற்கு வழிகோலியது. கந்தளாய், பன்குளம் போன்ற தமிழ் பிரதேசங்களில் குடியேற்றத் திட்டங்கள் சிங்களமயமாகியது.

வவுனியா பாவற்குளம் குடியேற்றத்திலுள்ள மூன்று பகுதிகளில் ஒரு பகுதி சிங்களக் குடியேற்றமாகியது. மற்றைய இரண்டு பகுதிகளையும் காப்பாற்றி தமிழ் பேசும் மக்களை அங்கு குடியமர்த்திய பெருமைக்குரியவர்கள் அந்நாட்களில் வவுனியா அரச அதிபராக கடமையாற்றிய இராசதுரையவர்களும் மாவட்ட காணி அதிகாரியாகவிருந்த இராஜரட்னம் அவர்களும் டி.ஆர்.ஓ. வாகவிருந்த சிறீனிவாசகம் என்பவருமாவார்கள். அப்போதைய வவுனியா பா.உ.ஸி.சுந்தரலிங்கத்தின் ஆசிகளுடன் இப்பணியைச் செய்து முடித்திருந்தனர். அவ்வாறு இப்போது செய்து கொள்ள முடியுமா? ஆதலால் வெளி மாகாணத்திலிருந்து நீரை இரணைமடுவுக்கோ யாழ். குடாவுக்கோ கொண்டு வரும் முயற்சியை முற்றிலுமாக கைவிடப்பட வேண்டும்.

### முன்னைய முயற்சிகள் தொடர

முன்னோர் கையாண்ட வழிமுறைகளை இக் காலத்திற்கு ஏற்ற விஞ்ஞான அணுகுமுறையோடு புதுப்பித்தல் செய்ய வேண்டும். யாழ்.குடாவிலுள்ள சகல நீர்த்தேக்கங்களும் ஏரிகளும் கேணிகளும் சுனைகளும் சிறிய பொக்கணைகள், கட்டைகள் போன்று குடாநாட்டில் எங்கேயெல்லாம் மழை நீரைச் சேமித்து வைத்திருக்க முடியுமோ அங்கேயெல்லாம் தாராளமாக மழை நீரைச் சேமித்து வைத்திருக்கக்கூடிய பொறிமுறைகளை தொழில்நுட்ப ரீதியாக கையாள வேண்டும்.

தேவைக்கேற்ப அவற்றை ஆழமாக்கவும் விசாலிக்கவும் செய்யலாம். சுற்றிவர எவராவது அத்துமீறிக் கடியிருந்தால் அவர்களை மாற்ற நிலம் கொடுத்தும் வீடு கட்டிக் கொடுத்தும் அப்புறப்படுத்தல் வேண்டும். சிறு மீன்கள் தாமாகவே உற்பத்தியாகி நீரை சுத்தப்படுத்தி நுளம்புத் தொல்லையை ஏற்படுத்தாது.

### நீரேரிகளை நன்னீராக்கல்

இவற்றைவிட கடல் நீரேரிகளிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். அவற்றில் அரச வேலைத்திட்டங்கள் எந்த வகையிலும் தடைப்படாது தொடர்ந்தும் நடைபெறவேண்டுமென்றும் சேமிக்கப்பட்ட மழைநீர் கடலுடன் கலக்க முடியாதவாறாக பலம் வாய்ந்த (மரத்தினாலல்லாது) வான் கதவுகள் பொருத்தப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். வடமராட்சி கடல் நீரேரி, உப்பாறு கடல் நீரேரி ஆகிய இரண்டு நீரேரிகளோடு ஆனையிறவு கடல் நீரேரியையும் சேர்த்து புனரமைக்கப்படல் வேண்டும்.



கனக நமநாதன்

இக்கடலேரிகளின் பரப்பளவுகள் முறையே 77: 26: 77 சதுர கிலோ மீற்றராகவுள்ளது. மொத்தம் 180 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் மழைநீரைச் சேமித்து வைக்கக் கூடியதாகவுள்ளதை நாம் திறம்படப் பயன்படுத்த வேண்டும்.

இந்தக் கடலேரிகளைப் பற்றியும் அவற்றில் முன்னர் அரசாங்கங்களினால் 1960 ஆம் ஆண்டுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள், அதன் விபரங்கள் பற்றியும் திரு. ஆறுமுகம் என்பவரால் சண்டே லீடரில் எழுதப்பட்டு வலம்புரியில் இம்மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் தமிழில் மொழி மாற்றம் செய்து வெளிவந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் நன்னீரின் அளவு குறைந்து வருகிறது என்ற கட்டுரையில் காணப்படுகின்றது.

(தொடரும்)

# ஒரு தொகுதி மோ.வாகன இலக்க தகடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன

யாழ்.மாவட்ட மோட்டார் வாகனங்களுக்கான இலக்கத் தகடுகள் மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமைச் செயலகத்தினால் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கீழ் குறிப்பிடப்படும் இவ் இலக்கத் தகடுகளுக்கான வாகன உரிமையாளர்கள் இக்காரியாலயத்திற்கு அலுவலக நாட்களில் பிற்பகல் 2 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடையில் வாகன பதிவுப் புத்தகத்துடன் நேரடியாக வருகைதந்து பெற்றுக்கொள்ளலாம் என மோட்டார் வாகன பரிசோதகர் அறிவித்துள்ளார்.

வாகன இலக்கத்தகடுகளின் விபரம் வருமாறு,

MB-0001, MF-0105, JO-0133, WF-0231, HG-0248, MP-0331, WY-0367, HV-0435, VQ-0452, GD-0473, JJ-0512, TN-0560, ME-0597, VR-0629, KV-0631, MR-0642, XH-0711, WA-0787, TH-0844, UQ-0847, VZ-0854, TS-0923, TR-0934, TX-0935, WA-1056, MC-1116, TM-1140, ML-1172, UN-1305, WT-1340, HF-1403, VY-1436, JP-1495, MX-1520, JF-1529, TE-1596, VO-1622, XG-1643, VF-1713, TE-1725, XT-1781, TY-1835, WE-1896, UE-1983, UE-1999, GQ-2015, JJ-2027, HX-2042, VS-2046, UE-2051, UE-2061, ME-2064, VA-2101, JS-2101, HF-2117, UB-2129, UL-2145, MN-2150, VK-2161, GG-2170, MU-2181, UP-2205, VA-2215, TI-2224, JI-2233, TF-2265, TK-2265, JT-2269, TT-2298, WG-2302, UU-2329, VM-2331, TO-2356, JL-2386, HG-2414, TR-2450, MK-2457, GB-2476, JA-2496, HO-2497, JP-2502, MN-2583, MV-2603, WB-2606, JO-2688, JO-2719, HU-2741, GV-2798, UW-2814, VU-2866, MK-2890, TO-2906, GG-2942, TB-2953, TH-2973, VE-2995, MC-3012, TO-3036, MP-3048, GI-3113, TM-3122, MU-3146, MB-3156, UJ-3161, VA-3166, HD-3312, VJ-3348, TZ-3398, MD-3475, XB-3484, XR-3497, VO-3529, UA-3582, VY-3582, UZ-3587, TC-3598, GL-3599, VU-3675, VE-3676, JC-3704, TB-3727, UQ-3732, GE-3748, HD-3757, TS-3778, UF-3778, HM-3791, VZ-3801, TY-3821, TG-3825, XP-3837, GH-3848, MM-3849, VN-3867, VB-3884, HJ-3887, UJ-3918, UI-3926, WF-3950, MQ-3964, MV-4010, MY-4028, TA-4056, TA-4057, MS-4059, HL-4091, GS-4112, JP-4123, VB-4129, TA-4147, JB-4150, VO-4165, TC-4223, WZ-4273, GK-4310, HM-4300, ME-4317, VR-4330, MD-4434, TQ-4443, JP-4445, TP- 4483, VC-4488, GB-4492, TW-4532, HS-4568, WO-4572, VA-4691, VL-4693, UT-4707, ML-4737, WE-4738, MX-4755, TC-4768, HX-4840, UC-4873, HZ-4884, MP-4893, TJ-4894, VB-4903, XM-4908, GO-4916, MO-4925, UN-4934, TF-4992, SJ-5015, TX-5018, UB-5022, UY-5049, MS-5065, VL-5154, MX-5160, MO-5186, JD-5193, XR-5219, MG-5253, WG-5275, JS-5296, JN-5304, MB-5308, MZ-5326, TU-5345, VL-5352, HL-5383, TI-5545, JS-5578, UY-5584, MG-5635, GO-5667, UX-5684, WG-5724, UG-5726, UD-5731, UM-5824, HA-5837, MO-5841, JC-5848, TP-5879, MF-5895, GU-5954, HX-5968, MR-6005, UT-6018, VA-6028, MG-6068, JX-6219, MT-6219, TL-6032, TC-6237, TN-6239, TR-6338, TO-6339, TI-6352, GO-6355, VR-6357, UM-6384, GO-6396, TD-6406, VF-6420, TY-6441, TV-6445, HI-6458, TC-6472, MA-6472, GT-6509, GN-6513, UQ-6532, JG-6548, VT-6565, HM-6573, TS-6576, UN-6625, TM-6661, VF-6663, GF-6681, TH-6688, MJ-6696, JM-6794, MM-6799, WR-6847, TS-6881, VB-6887, VB-6892, JR-6896, GP-6907, XD-6924, TB-6948, UM-6962, HN-6978, TV-7025, JU-7071, GA-7076, GJ-7089, TM-7096, TE-7130, UX-7134, UU-7138, TD-7253, US-7175, UC-7178, UM-7223, UD-7223, VB-7245, JP-7261, VP-7299, TK-7319, TK-7324, TJ-7349, UU-7575, MH-7405, MT-7449, TJ-7451, MT-7454 MH-7502, HT-7503, JC-7528, HM-7543, VN-7553, TE-7561, VL-7582, WA-7603, GP-7623, WV-7634, HC-7644, HC-7655, MU-7657, UJ-7703, JS-7809, VJ-7716, VB-7725, TO-7754, GK-7770, WS-7793, VU-7793, UX-7796, HP-7812, ME-7854, JN-7880, MH-7881, UM-7907, HX-7908, GZ-7926, VO-7929, MM-7934, MY-7935, UQ-8019, MI-8029, HC-8046, VT-8060, UQ-8064, VD-8069, MS-8075, TY-8088, UX-8087, MR-8094, MG-8111, JZ-8117, TH-8121, UY-8125, VS-8153, VA-8172, UP-8175, WF-8189, UM-8209, TY-8223, UP-8226, WS-8229, VK-8279, JV-8283, WN-8300, JR-8301, TL-8322, JB-8331, VS-8335, UH-8335, GP-8336, HM-8341, MI-8341, MB-8344, JY-8358, JZ-8376, TU-8388, JN-8421, WF-8444, JA-8458, XH-8463, TW-8467, MA-8473, VH-8481, UV-8485, VF-8506, VC-8583, HZ-8600, UR- 8607, GS-8614, GL-8620, HF-8627, JQ-8688, TB-8729, MX-8730, VB-8740, GO-8775, GL-8820, GL-8823, TM-8824, MD-8924, HX-8967, GK-9044, VU-9073, VP-9086, JF-9093, TS-9101, MM-9104, UL- 9108, VH-9128, VY-9144, TR-9158, MU-9196, GD-9216, JT-9237, TM-9271, MR-9283, VH-9284, TR-9294, UZ-9307, MU-9320, JM-9324, MA-9325, MA-9335, GP-9349, UT-9375, WD-9424, WO-9432, GC-9449, JC-9458, GS-9482, TN-9489, GS-9509, GS-9510, GS-9538, UP-9555, XE-9569, JZ-9579, MF-9584, GC-9588, UM-9624, MC-9637, TS-9645, MA-9645, GZ-9648, MD-9670, JJ-9680, JR-9690, HV-9733, VD-9736, HV-9747, JD-9770, UL-9773, WM-9808, TZ-9808, TJ-9836, GQ-9847, ML-9850, GA-9855, MG-9868, MV-9869, MU-9887, HR-9908, UQ-9925, WX-9947, ML-9955, MJ-9960

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டம் வேகமாக அபிவிருத்தியடைந்து வருகிறது

## ஊடகவியலாளர் கருத்தரங்கில் யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் கல்வியும் கைத்தொழிலும் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய நிலையிலேயே உள்ளது என யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.யாழ்.மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வொன்று யாழ்.பொதுநூலகத்தில் நேற்றுக்காலை நடை பெற்றது.**





இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து துறை தொடர்பாக விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டம் முன்னரை விட தற்போது மிக வேகமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது.

இவ் அபிவிருத்திகள் மக்களைச் சென்றடைய வேண்டும், அபிவிருத்தி என்பது மக்களுக்காக, மக்கள் நலன்களுக்காக செய்யப்படுகின்ற வேலைத்திட்டமாகும்.

அவ்வாறு மக்களுக்காக, மக்கள் நலன்களுக்காகச் செய்யப்படுகின்ற அபிவிருத்தியை மக்கள் அறிந்திருக்க வேண்டும்.

அவ்வாறு அறிந்திருந்தால்தான் அனைத்து மக்களும் சம அளவிலான, நிலையான அபிவிருத்தியை அடைய முடிவதோடு அபிவிருத்தியின் திருப்தியையும் பெறமுடியும்.

இவ்வாறு மக்களுக்காக, மக்கள் நலன்களுக்காக அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களை ஊடகங்கள்தான் மக்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

இத்தெரியப்படுத்தலை யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்லாது சர்வதேசத்திலும் ஊடகங்கள் மேற்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களோடு தற்போதைய காலத்தை ஒப்பிடும்போது இன்று எந்தளவுக்கு யாழ்.மாவட்டம் அபிவிருத்தியடைந்துள்ளது என்பதை பார்க்க முடியும்.

குறிப்பாக வேறு சில மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் இன்று யாழ்ப்பாணத்தில் எந்தளவுக்கு அபிவிருத்தி நடைபெறுகின்றது, நடைபெற்றுள்ளது என்பதை நாம் நேரடியாகவே பார்க்க முடியும்.

ஆகையால் இவ் அபிவிருத்தியை மக்களுக்கு உணர்த்தவேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு.போக்குவரத்து, விவசாயம், சுகாதாரம், உயர்கல்வி, விளையாட்டு, வர்த்தகம், வீடமை ப்பு, மின்சாரம், சுற்றுலா என்பன கணிசமான அளவுக்கு கடந்த காலங்களை விட அபி விருத்தியில் முன்னேற்றம் கண்டுள்ளது.

கல்வி, கைத்தொழில் என்பவற்றால் அபிவிருத்தி இடம்பெற்று வருகின்ற போதிலும் அவை மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளன.


இலங்கையில் அழிக்கமுடியாத கல்வியை யாழ்.மாவட்டம் கொண்டுள்ளது. எனினும் கடந்தகால சூழ்நிலைகளால் யாழ். மாவட்டத்தின் கல்வி நிலை பின்தங்கிவிட்டது.

எனினும் தற்போது அவ் இழந்த நிலையை எமது மாணவர்கள் பெற்றுக்கொள்ள தொடங்கி விட்டனர்.தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பதக்கங்களை வென்று வருகின்றனர்.

கைத்தொழிலைப்பொறுத்தவரையில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அனைவருமே ஈடுபடுவதைக் காணமுடிகின்றது.

எனினும் நம் நாட்டை பொறுத்தவரையில்





அனைவரும் கைத்தொழிலில் ஈடுபடுவதில்லை. கைத்தொழில்மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு முன்னர் நியாயமான விலை கிடைப்பதில்லை.

தற்போது வீதி அபிவிருத்தியின் காரணமாக பொருட்களை ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்வதில் எவ்வித இடர்பாடுகளும் காணப்படுவதில்லை. இதனால் எமது கைத்தொழிலாளர்களுக்கு நியாயமான விலை பொருட்களுக்கு கிடைக்கின்றது.

இக்கைத்தொழிலை அனைவரும் செய்வதன்மூலம்தான் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பட்டியலுடன் நாமும் இணையலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4-5-6)

# மாற்று திறனாளிகளுக்கான செயலமர்வு எதிர்வரும் 27 இல்

(யாழ்ப்பாணம்)

மாற்று திறனாளிகளை வேலைக்கு அமர்த்துதல் மற்றும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நடவடிக்கைகளுக்கு தொழிற்றுறை உறவுகள் முறையில் சிறந்த செயற்பாடுகளை பின்பற்றுவது தொடர்பாக விளக்கமளிக்கும் செயலமர்வை இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2011 ஆம் ஆண்டில் இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனத்துக்கும் யாழ்ப்பாணம் வர்த்தக சம்மேளனத்துக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையை தொடர்ந்து யாழ்ப்பாண பிராந்தியத்தை சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக நடவடிக்கைகளுக்கு தொழிற்றுறை உறவுகள் முறையில் சிறந்த செயற்பாடுகளை பின்பற்றுவது தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் செயலமர்வு ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

ஒரு நாள் செயலமர்வாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) தொடர்பான நடைமுறை விடயங்கள், வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை வழங்கல்கள் போன்றன இடம்பெறவுள்ளன.

அத்துடன் மாற்றுத்திறன் கொண்ட நபர் ஒருவரை தொழிலுக்கு அமர்த்துவது தொடர்பான குறுகிய செயலமர்வொன்றையும் முன்னெடுக்க இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனம் தீர்மானித்துள்ளது. யாழ்ப்பாண பிராந்தியத்தில் தற்போது சுமார் 7800 மாற்றுத்திறன் வாய்ந்தவர்கள் காணப்படுவதாகவும் இதில் பெரும்பான்மையானோர் தொழில் வாய்ப்பு எதுவுமின்றி காணப்படுவதாகவும் ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த மாற்றுத்திறன் வாய்ந்தவர்களில் 20 வீதமானவர்களின் அவல நிலைமைக்கு இந்த பிராந்தியத்தில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக அமைந்திருந்தது.

2000 ஆம் ஆண்டு முதல் மாற்றுத்திறனாளிகளுக்கான வலையமைப்பின் மூலம் இதுவரையில் 400 இற்கும் அதிகமான மாற்றுத்திறன் வாய்ந்தவர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளது.

இந்த செயலமர்வில் மாற்றுத் திறனாளிகளின் சமூகத்தின் மூலம் வர்த்தக நடவடிக்கைகளுக்கு கிடைக்கக் கூடிய சிறந்த அனுகூலங்கள் குறித்த விடயங்கள் பரிமாறப்படவுள்ளன.

வவுனியாவைச் சேர்ந்த பார்வை குறைந்த நபர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் தொடர்பான இரண்டாவது செயலமர்வை இந்த வலயமைப்பு அண்மையில் பூர்த்தி செய்திருந்தது. இந்த பயிலுநர்களுக்கு எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறும் செயலமர்வில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-4)

# சர்ச்சைக்குரிய சம்பவங்கள் தொடர்பில் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

மர்மமான முறையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அண்மையில் மீட்கப்பட்டிருந்த மருந்து வில்லைகள் தொடர்பிலும் அதற்கு முன்னர் சத்திரசிகிச்சை உபகரணங்கள் வெளியிடத்தில் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக்கூட உபகரண மீட்பு தொடர்பில் தற்போதும் விசாரணைகள் இடம்பெற்றுக்கொண் டிருக்கின்றன.

இவற்றோடு தொடர்புடைய இரு ஊழியர்கள் தற்போது விடுமுறையில் உள்ளதனால் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

எனினும் அவ்விருவரும் வைத்தியசாலைக்கு வந்தவுடன் விசாரணைகள் இடம்பெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

இதனைவிட அண்மையில் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் 213 குளொக்சஸிலின் மருந்து வில்லைகள் மீட்கப்பட்டன. அவை யாவும் தற்போது பழுதடைந்து காணப்படுகின்றன. எனினும் இம் மருந்து வில்லைகளை பெரிதாக எடுத்துக் கொள்ள முடியாது. இருப்பினும் இவ்வளவு தொகையான வில்லைகள் எவ்வாறு அவ் விடத்தில் காணப்பட்டன.

அவை எவ்வாறு இவ்விடத்திற்கு கொண்டு வரப்பட்டனஎன்பவைதொடர்பில்நாம்விசாரணைகளை மேற்கொள்ளத் தான் வேண்டும்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு விரைவில் அதன் உண்மைத் தன்மை கண்டறிப்படும் என்றார். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிப்படை வசதிகள் இன்றி

# அல்லலுறும் மக்கள்

### நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(மல்லாவி)

**மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலைபாணி, தெகிளங்குளம், ஆசைக்கிராமம், கொம்புவைத்தகுளம், மூன்றுமுறிப்பு ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருவதாக கவலை வெளியிட் டுள்ளனர். மேற்படி கிராமங்களில் 150 இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் வீதி, மின்சாரம், நிரந்தர வீடுகள், ஆரம்ப சுகாதார நிலையம், பாடசாலை என்பன தேவையாகவுள்ளது.**

இக்கிராமங்களுக்குச் செல்லும் வன்னிவிளாங்குளம்- மூன்று முறிப்பு பிரதான வீதி சுமார் 17கி.மீ. தூரத்தை கொண்டது. இது வீதி அபிவிருத்தி திணைக்களத்தினருக்கு சொந்தமானதாகக் காணப்படுகின்றது. ஆயினும் இவ்வீதி புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் குன்றும் குழியுமாக இருப்பதனால் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளது.

அத்தோடு மின்சாரம் இதுவரை முற்றாக வழங்கப்படவில்லை. நிரந்தர வீட்டுத்திட்டங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் அனைவருக்கும் கிடைக்கவில்லை. ஆரம்ப சுகாதார நிலையம் இன்மையால் நோயாளர்கள் சிரமங்களின் மத்தியில் மாங்குள ஆதார வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளதால் உயிராபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இங்கு விவசாயம் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் சந்தைப்படுத்தும் வசதிகளில்லை. இதனால் மல்லாவி பொதுச் சந்தை, கிளிநொச்சி மாவட்ட சந்தை ஆகியவற்றுக்கு தமது பணத்தை செலவிட்டு விற்பனை செய்வதனால் நட்டமடைந்துள்ளனர்.

மேலும் இக்கிராமத்தில் ஆரம்பக் கல்விப் பாடசாலை மட்டுமே இயங்குவதனால் ஏனைய மாணவர்கள் மாங்குளம் மகாவித்தியாலயத்திற்கு செல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறாக பாடசாலைக்கு செல்லும் மாணவர்களும் ஏனைய தேவைகளுக்காகச் செல்லும் பொதுமக்களும் பேருந்து சேவையின்மையால் 17 கி.மீ. தூரத்திற்கு கால் நடையாக சென்று வன்னிவிளாங்குளம் சந்தியில் பேருந்து சேவையை பெறுகின்றனர்.

எனவே, இக்கிராம மக்களின் நிநிலையை கவனத்திலெடுத்து அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-9-15)




## இடர்பாடுகள் பலவற்றுக்கு மத்தியில்

# இழப்பீட்டுக்கு விண்ணப்பிக்க வேண்டிய நிலை

(மல்லாவி)

துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மக்கள் வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கை காரணமாக சொத்து அழிவுகளுக்கு உட்பட்டு இழப்பீட்டுக்காக விண்ணப்பிப்பதற்கு தரவுகளையும் உறுதிப்படுத்தல் கடிதங்களையும் பெறுவதற்கு மல்லாவி பொலிஸ் நிலையத்திற்கும் முல்லை. மாவட்ட தேர்தல் பணியகத்திற்கும் அலைந்து திரிவதை காணமுடிகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இழப்பீட்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் மேற்படி துணுக்காய், பாண்டியன்குள பிரதேச மக்கள் குறுகிய கால இடைவெளிக்குள் அவற்றை கையளிக்க வேண்டி இருப்பதன் காரணமாக 8 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் மேற்படி அரச திணைக்களங்களுக்கு சென்று 18 வகையான ஆவணங்களை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

மல்லாவி பொலிஸ் நிலையத்திலும் முல்லை.மாவட்ட தேர்தல் பணியகத்திலும் பொலிஸ் பதிவேட்டு பிரதியையும் வாக்காளர் இடாப்பு பிரதியையும் எடுக்க செல்கின்ற போது ஆளணி பற்றாக்குறை காரணமாக உடன் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது.

முல்லைத்தீவு தேர்தல் பணியகத்திற்கு செல்கின்ற மக்கள் துணுக்காயில் இருந்து காலை 6 மணிக்கு புறப்படும் பேருந்தில் பயணித்து முல்லைத்தீவிற்கு சென்று தேவைகளை பூர்த்தி செய்து அதே பேருந்தில் மீண்டும் பிற்பகல் 4 மணிக்கு திரும்ப வேண்டிய நிலை உள்ளது. பி.ப. 4 மணிக்கு பின்னர் பேருந்து சேவை இன்மையால் மாங்குளம் வரை வேறு வாகனத்தில் பயணித்து மாங்குளத்தில் இருந்து 15 கி.மீ. தூரங்கொண்ட துணுக்காயை கால்நடையாகவே சென்றடைய வேண்டி உள்ளது எனவும் கவலை தெரிவித்துள்ளனர். (ம-15)

# தோணிக்கல் இந்து மயானத்தில் மண்டபம் அமைக்க கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியாவில் உள்ள பல கிராமங்களுக்கு பொதுவாக வவுனியா தோணிக்கல்லில் உள்ள இந்து மயானம் காணப்படுகின்றது. இம் மயானம் காடாக கணப்படுவதோடு பாதைகளும் சீரற்று காணப்படுகின்றது. இதனால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் பல ஆண்டுகள் பழைமையான இவ் இந்து மயானத்தில் இன்று வரை இந்து முறையிலான கிரியைகள் ஆற்றுவதற்கு மண்டபம் அமைக்கப்படவில்லை. இதுபற்றி பல தரப்பினரிடம் எடுத்துக் கூறிய போதும் இதுவரை எது வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் இறந்தவர்களுக்கான கிரியைகளை ஆற்றமுடியவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ம-250)

# பூநகரி தெற்கு பிரச்சினைகள் குறித்து பரிசீலனை செய்வதாக உறுதியளிப்பு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் தெற்குப் பகுதி மக்களால் கிராம பிரச்சினைகள் சுட்டிக் காட்டப்பட்ட போது பரிசீலனை செய்வதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

மேற்படி கிராம மக்களின் பிரச்சினைகளை கேட்டறியும் நோக்குடன் கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. ஜெயபுரம் உப பிரதேச செயலர் அலுவல கத்திலும் கரியாலை நாகபடுவான் அ.த.க. பாடசாலையிலும் காலை, மாலை அமர்வுகளாக இடம்பெற்றது.

இக்கூட்டத்திலே மக்களால் பிரச்சினைகள் எடுத்துரைக்கப்பட்டன. இதற்கமைய தேவன்குளம், பண்டிவெட்டிக்குளம் ஆகிய இரண்டு குளங்கள் புனரமைப்பு, முழங்காவில் பகுதியில் மிதிவெடி அகற்றப்படாத பிரதேசத்தில் மிதிவெடி அகற்ற வேண்டியதன் அவசியம், கரியாலை நாகபடுவான் குளத்தின் கலிங்கு பிரிக்கும் ஜெயபுரம் கிராமத்தையும் நாகபடுவான் கிராமத்தையும் இணைக்கும் வகையில் கலிங்கிற்கு மேலாக மேம்பாலம் அமைத்தல் , அத்தோடு ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் கரியாலை நாகபடுவான் கிராம மாணவர்கள் கலிங்கு பாயும் மழை காலத்தில் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான பல பிரச்சினைகள் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பரிசீலனையை மேற்கொள்வதாக நிகழ்வில் கலந்து கொண்ட அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பூநகரி பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் வி.சொக்கநாதன், மாவட்ட கமநல சேவை ஆணையாளர் தயாரூபன், மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் விகிர்தன், கலோரஸ்ட் மிதிவெடி அகற்றும் நிறுவன இணைப்பாளர், நாச்சிக்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9-84)

# கிளை வாய்க்காலை புனரமைக்க கோரிக்கை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுகுள நீர்ப்பாசன வாய்க்கால்களின் அபிவிருத்தித்திட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் உருத்திரபுரம் வாய்க்கால் பகுதியிலுள்ள நீலன் ஆறு, கொல்லன் ஆறு ஆகிய கழிவு வாய்க்கால்கள் திருத்தம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இவற்றை சென்றடையும் கிளை ஆறுகள் உள்ள இடங்கள் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக இப்பகுதி விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் கருத்து தெரிவிக்கும் போது மேற்படி கிளை வாய்க்கால்கள் புனரமைப்பு செய்யப்படும் போது, குஞ்சுப்பரந்தன், பெரிய பரந்தன் ஆகிய கிராம மக்களும் நன்மையடைய முடியும் என்றனர்.

அத்துடன் பிரதான வாய்க்காலின் நீர் வேகமாக வடிந்தோடுவதற்கு உதவியாக இருக்குமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் நீலன் ஆறு, கொல்லன் ஆறு ஆகியவற்றின் கிளைவாய்க்கால்களையும் புனரமைக்க வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ம-9-254)



துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் மாங்குளத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சண்முகரட்ணம் பாடசாலையின் திறப்பு விழா அண்மையில் இடம் பெற்றது. இதில் துணுக்காய் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தமிழ்மாறன் மங்கல விளக்கேற்றுவதையும் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலில் தூசியைக் கிளப்பி விடுகின்றோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகின்றோம். –பிஷப் பார்க்லி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போதைப் பாவனையைத் தடுப்பது சமூகத்தின் தலையாய பொறுப்பு

இன்றைய காலசூழ்நிலையில் வசதிகளும் வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேநேரம் அந்த வசதிகளும் வாய்ப்புக்களும் எங்கள் இளம் பிள்ளைகளைத் தவறான வழிக்கு இட்டுச் செல்வதற்கும் கணிசமாக உதவுகின்றது என்பதை சொல்லித்தான் ஆகவேண்டும்.

இன்றைக்கு 40 வயதை அடைந்திருக்கக் கூடிய ஒருவரின் இளமைப்பருவத்தில் இருந்த சூழ்நிலையும் இப்போது 16 வயதில் இருக்கக் கூடிய ஒரு இளைஞன் வாழ்கின்ற சூழ்நிலையும் வேறுபட்டது.

அன்று ஒரு சமூகக் கண்காணிப்பும் உறவுப் பலமும் எங்களிடம் இருந்தன.

மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சின்னம்மா என்ற கூட்டுக் குடும்பத்தின் பலமான உறவுகளின் கண்களில் இருந்து எவரும் விலகமுடியாது.

ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. எங்கள் பிள்ளைகளை கண்காணிப்பதற்கு உறவும் இல்லை சமூகமும் இல்லை என்றாயிற்று.

முன்பெல்லாம் ஊர்ப்பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற கலாசாரம். பள்ளிக்கூடமும் வீட்டுப் படிப்பும் என்ற எல்லைகளுக்குள் சொந்த ஊரைச் சேர்ந்த ஆசிரியர்களிடம் கல்வி கற்பதால், பாடசாலை நேரம் கடந்தும் மாணவர்களைக் கண்காணிக்கின்ற ஒருபெரும் கொடை அன்றைய இளம் சந்ததிக்கு இருந்தது.

ஆனால் இன்றோ! பாடசாலை உபாத்தியார் முதல் தனியார்கல்வி நிறுவன வாத்தியார் வரை எல்லோரும் உறவறியா உழைப்பாளிகள் ஆயிற்று.

யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. நாம் மௌனமாக இருப்பதே புத்திசாலித்தனம் என்ற முடிவை ஆசிரியர்கள் எடுப்பதற்கும் காரணம் உண்டு.

பிள்ளையை அதட்டினால் சிறுவர் உரிமை அமைப்புகள் கொடி பிடித்து வருகின்றன.

ஊடகங்கள் நிலைமைகளை அறியாமல் சம்பவங்களை பூதாகரப்படுத்தி விடுகின்றன.

எல்லாவற்றிற்கும் விமர்சனம், எல்லாவற்றிற்றும் விசாரணை, விளக்கம் என்றால் எந்த ஆசிரியரால் விசுவாசமாகப் பணியாற்ற முடியும்?

இதன் காரணமாக இப்போது எங்கள் மாணவர்களிடம் பயமும் இல்லை. (குரு) பக்தியும் இல்லை.

இதன் வெளிப்பாடுதான் மாணவர்கள் மத்தியில் போதைப் பாக்கும் போதைவஸ்து பயன்பாடும் ஊடுருவத் தொடங்கியுள்ளன.

வீதி புனரமைப்பவர்கள், வீடுகட்டுபவர்கள், பிச்சை எடுப்பவர்கள், பிள்ளைகளைப் பராமரிப்பதாகக் கூறி நிதி சேகரிப்பவர்கள் என அனைவரும் வெளியார் என்றால், கட்டுக்கோப்புடன் வாழ்ந்த எங்கள் பிள்ளைகள் கெட்டுப்போவதற்கான சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் அதிகம் அல்லவா?

எனவே எங்கள் பிள்ளைகளை பாதுகாக்கின்ற பெரும் பொறுப்பு எங்களுக்கு உண்டு.

அதிபர்கள், ஆசிரியர்கள், உறவுகள், ஊர்ப் பொது அமைப்புகள், கல்விச் சமூகத்தினர் என ஒவ்வொருவரும் இதுவிடயத்தில் கவனம் கொள்வதும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கையை உன்னிப்பாகக் கவனிப்பதுமே எங்கள் இளம் பிள்ளைகளை காப்பாற்றி அவர்களை வாழ வைப்பதற்கான ஒரே வழி. இதை நாம் செய்யத் தவறினால் எங்கள் கவலை ஒருபோதும் தீரப்போவதில்லை.

# செயலிழந்த தமிழ் மன்றங்களை செயற்படுத்த நடவடிக்கை

## பேராசிரியர் விசாகரூபன்

பாடசாலைகளில் செயலிழந்துள்ள தமிழ் மன்றங்களை மீள செயற்பட வைப்பதோடு யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் ஊடாக பல செயற்பாடுகளையும் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத்தலைவரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவருமான பேராசிரியர் கி.விசாகரூபன் தெரிவித்துள்ளார்.

நன்றாகத் தமிழ் செய்வோம் என்னும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ்.மறைமாவட்டமும் இணைந்து நடத்தும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு பெருவிழா தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு யாழ். பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தைப்பொறுத்தவரை பாடசாலை மட்டத்திலுள்ள தமிழ் மன்றங்கள் செயலிழந்த நிலையில் தான் உள்ளன.

அவற்றை மீளவும் செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

அத்தோடு சகல பாடசாலைகளிலும் தமிழ் மன்றங்களை உருவாக்கி அதன் ஊடாக மாணவர்களுக்கு மொழியை ஊட்டவும் விளக்கம் கொடுக்கவும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் தயாராகி வருகின்றது.

மாணவர்களிடையே போட்டிகளை நடத்தி பரிசில்கனை வழங்கி கௌரவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுத்விர தமிழ்மொழியின் பயன்பாட்டை அதிகரிக்கவும் தற்போது யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த வருடம் 20பேர் தமிழ்மொழியை விசேடமாகக் கற்பதற்கென பதிவை மேற்கொண்டிருந்தனர். ஆனால் இவ் வருடம் 70 பேர் பதிவை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு தமிழ்மொழியை கற்போரின் வீதம் அதிகரித்து வருகின்றது.

இதனைவிட தென்னிலங்கையைச் சேர்ந்த மாணவர்கள் அதாவது சட்டத்துறையில் கல்வி கற்றுவரும் மாணவர்கள் கூட தமிழைக்கற்கவேண்டும் என்ப தில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம், சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், பேராசிரியர் ஞா.பிலேந்திரன், விரிவுரையாளர் ச.லலீசன் உள்ளிட்டோர் கலந்து கருத்துரை வழங்கியிருந்தனர். (அ-6)

# கோம்பயன் மயானத்தில் மின்சார தகன அடுப்பு

## விரைவில் என்கிறார் யாழ்.மாநகர முதல்வர்

வண்ணார்பண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைக்கப்படுகின்ற மின்சார தகன அடுப்பு அடுத்த வருடத்துக்குள் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படும் என யாழ். மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

வடமாகாணத்தில் அமைக்கப்படும் முதலாவது மின்சார தகன அடுப்பு இதுவாகும் என்ற பெருமையும் இதற்கு உண்டு எனவும் அவர் கூறினார்.

இரண்டு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படுகின்ற இம்மின்சார தகன நிலையத்தின்மூலம் வண்ணார் பண்ணை மக்கள் மட்டுமல்லாது அனைத்து மக்களும் பயனடையவுள்ளனர்.

இதேபோல் யாழ்.மாநகர சபைக் குட்பட்ட இடங்களில் நாம் மக்களின் நலன்களுக்காக பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# அம்புலன்ஸ் சேவையை பரிசோதித்த யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்

அம்புலன்ஸ் சேவையை பரிசோதித்து பார்த்தபோது அந்தச்சேவை சரியான முறையில் செயற்படுவதை அவதானிக்க முடிந்ததாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் யாழ்.மாவட்ட செயலகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட ஊடக கருத்தரங்கு நேற்று யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய அரசாங்க அதிபர் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளை பல்லூடகத்தின் உதவியுடன் விளங்கப்படுத்தினார்.

இதன்போது சுகாதாரம் தொடர்பாக விளங்கப்படுத்திய அரசாங்க அதிபர் தாம் நேற்றையதினம் (நேற்று முன்தினம்) 110 என்ற இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி அம்புலன்ஸ் சேவை மையத்திற்கு நடக்காத ஒரு சம்பவம் பற்றி அறிவித்து அம்புலன்ஸ் வண்டியை அங்கு வரவழைத்ததாகவும் அங்கு அம்புலன்ஸ் வண்டி வந்தபோது சேவை சரியான முறையில் நடக்கிறதா என்பதை பரிசோதித்ததாக அவர்களிடம் தெரிவித்ததாகவும் இதனை சாதாரண ஒரு பொது மகனைப்போன்று தான் செய்ததாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-4-6)

# தமிழர் வி.கூட்டணியின் மத்திய செயற்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட மத்திய செயற்குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளதாக அக் கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார்.

இந்த விசேட மத்திய குழுக்கூட்டத்தில் வடமாகாண சபைத்தேர்தல் மற்றும் இன்றைய அரசியல் நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ்.நாச்சிமார் கோவிலடியிலுள்ள தமது கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அலுவலகத்தில் இந்த விசேட செயற்குழுக்கூட்டம் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# முன்னாள் மாநகரசபை உறுப்பினருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.நிஷாந்தன் பிணையில் செல்வதற்கு யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த 10 ஆம் திகதி அத்துமீறி நுழைந்து வீட்டின் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹயஸ் வாகனம் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும் அவ் வாகனம் மீது தீ மூட்ட முயற்சித்ததாகவும் வீட்டின் உரிமையாளரின் முறைப்பாட்டினையடுத்து நிஷாந்தன் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்காக யாழ்.நீதவான் பெ. சிவகுமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நிஷாந்தன் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணியின் பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு 5 இலட்சம் பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

மேற்படி வழக்கு மீண்டும் விசாரணைக்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ-4-6)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



## தேடுவது உனக்கு கிடைக்கும்

✠ வெண்ணெய் எடுக்க சூரிய உதயத்திற்கு முன்பாக கடைய வேண்டும். பகலில் கடைந்தால் நன்றாகச் சேராது. அதுபோல் சிறுவயதிலேயே ஆன்மிக நெறியில் நின்று மனதை கடவுளிடம் செலுத்தினால்தான் இறை காட்சி கிடைக்கும்.

✠ மனிதனின் மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. அது கிழிந்து, நாலாபக்கங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது சிரமம். அதுபோல் மனம் பல வழிகளில் சென்று, உலக விடயங்களோடு ஈடுபட்டிருக்கும் போது அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவதும் சுலபமல்ல.

✠ கடவுளைத் தேடுபவன் அவரை அடைகிறான், செல்வத்தைத் தேடுபவன அவற்றை அடைகிறான். நீ எதைத் தேடுகிறாயோ அதையே அடைவாய்.

✠ "நான்" என்னும் அகங்காரம் அழியும்போது கடவுள் தோன்றுகிறார். ஒருவனது அகங்காரம் அவனது உடல் இருக்கும் வரை அவனைவிட்டு முற்றிலும் நீங்குவதில்லை.

✠ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவம் தெரிந்தவனுக்கு புண்ணியமும் தெரியும்; குணத்தை அறிந்தவன், குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூரோ கிண்ணம்; இத்தாலியை வீழ்த்தியது ஜேர்மனி

பெண்களுக்கான 'யூரோ' கிண்ணக் காற்பந்து தொடரின் அரையிறுதிக்கு ஜெர்மனி அணி முன்னேறியது. காலிறுதியில், இத்தாலியை வீழ்த்தியது.

சுவீடனில், பெண்களுக்கான 11ஆவது 'யூரோ' கிண்ணக் காற்பந்து தொடர் நடைபெற்றுவருகிறது. இதன் காலிறுதியில் 'நடப்பு சாம்பியன்' ஜேர்மனி, இத்தாலி அணிகள் மோதின. ஆட்டத்தின் 26ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் லாவ்தெர் முதல் கோல் அடித்தார். இதற்கு இத்தாலி அணி வீராங்கனைகளால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. முதல் பாதி முடிவில் ஜேர்மனி 1-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் கடைசி நிமிடம் வரை போராடிய இரு அணி வீராங்கனைகளால் கோல் எதுவும் அடிக்க முடிய வில்லை. ஆட்டநேர முடிவில் ஜேர்மனி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன் னேறியது.

மற்றொரு காலிறுதியில் சுவீடன், ஐஸ்லாந்து அணிகள் மோதின. இதில் சுவீடன் அணி 4-0 என வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.



## டெஸ்ட் தரவரிசையில் அம்லா முதலிடம்

சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் போட்டி வீரர்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. இதில் தென்னாபிரிக்காவின் ஹாசிம் ஆம்லா முதலிடத்திலும், மேற்கிந்திய தீவுகளின் ஷிவ்நரின் சந்தர்பால் 2ஆவது இடத்திலும் இருக்கின்றனர்.

7ஆவது இடத்தில் இருந்த இந்திய வீரர் புஜாரா ஒரு இடம் முன்னேறி 6ஆவது இடத்தைப் பிடித்தார். 11ஆவது இடத்தில் இருந்த மற்றொரு இந்திய வீரரான ஓஜா வெற்றிகரமாக 10ஆவது இடத்துக்கு முன்னேறினார். 7ஆவது இடத்தில் இருந்த அஸ்வின் 8ஆவது இடத்துக்கு நகர்ந்தார்.

ஆஷஸ் கிரிக்கெட் தொடரில் அதிரடி காட்டிய இங்கிலாந்தின் வீரர்கள் பலரும் தரவரிசையில் ஏறுமுகம் கண்டுள்ளனர். இங்கிலாந்தின் பெல் 11ஆவது இடத்திலும், 26ஆவது இடத்தில் இருந்த ரூட் 21ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர்.

# ஆஷஸ் தொடரில் இருந்து ஒதுங்கினார் ஆஸியின் பற்றின்சன்



இங்கிலாந்தில் இடம்பெற்றுவரும் ஆஷஷ் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பற்றின்சன் இனி மேல் பங்கெடுக்கமாட்டார் என அறிவிக்கப்பட டுள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள முதுகுவலி காரணமாகவே அவர் பங்கெடுக்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முடிவின் பின்னர் ஜேம்ஸ் பற்றின்சன் தனது இடுப்பு, முதுகுப் பகுதிகளில் வலியை உணர்ந்ததாகவும் அதன் காரணமாக ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்கான் பரிசோதனைகளின் முடிவில் அவருக்கு உபாதை ஏற்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதன் காரணமாக அவர் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள எஞ்சியுள்ள 3 டெஸ்ட போட்டிகளிலும் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்படுகிறது.

இம்முறை ஆஷஷ் தொடரில் 2 போட்டிகளிலும் பங்குபற்றி 7 விக்கெட்டுக்களை மாத்திரம் கைப்பற்றியுள்ள ஜேம்ஸ் பற்றின்சன், துடுப்பாட்டத்தில் ஓரளவு சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

அவர் துடுப்பாட்டத்தில் 4 இன்னிங்ஸ்களில் 2 ஆட்டமிழக்காத இன்னிங்ஸ்களோடு, 36 என்ற சராசரியின் 72 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

ஜேம்ஸ் பற்றின்சனுக்குக் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் அவருக்குப் பதிலாக வேறொரு வேகப்பந்து வீச்சாளர் இக்குழாமில் சேர்க்கப்படுவாரா என இதுவரை அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

# ஆஷஸ் தொடரை வெல்வோம்

## - ஆஸி. அணித் தலைவர் கிளார்க்

ஆஷஸ் தொடரில் 2-0 என்று பின்தங்கியபோதும், சரிவிலிருந்து மீண்டும் தொடரை வெல்வோம் என்று அவுஸ்திரேலிய தலைவர் மைக்கேல் கிளார்க் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் போட்டியின் 2ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 347 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கிளார்க் மேற்கண்டவாறு தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறுகையில்,


அணியில் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்காதது பின்னடைவு.

இப்போட்டியில் எங்கள் துடுப்பாட்ட வீரர்களில் இருவர் 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தோம். ஆனால், தொடர்ந்து சிறப்பாக ஆடி அதிக ஓட்டங்கள் குவிக்க நாங்கள் தவறி விட்டோம்.

லண்டன் மைதானம் துடுப்பாட்டத்துக்கு அற்புதமாக இருந்தது. அருமையான வாய்ப்பை நாங்கள் தவறவிட்டோம். முன்னணி வீரர்கள் சிறந்த அனுபவம் கொண்டிருந்தபோதும, அடிப்பதற்கு தேர்வு செய்த பந்து தவறானது. ஆனால், இங்கிலாந்து வீரர்கள் சரியான பந்துகளை மட்டும் தேர்வுசெய்து விளையாடினர். மேலும், நீண்ட நேரம் விளையாடுவதை அவர்கள் விரும்பினர்.

அடுத்த டெஸ்டில் நாங்கள் சிறப்பாக விளையாடி வெற்றி பெற வேண்டுமெனில், எங்களுக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது என்று தெரிவித்தார்.

3ஆவது டெஸ்ட் போட்டிக்கு முன்பு அவுஸதிரேலிய அணி, சசக்ஸ் அணிக்கு எதிராக 3 நாள் கொண்ட டெஸ்ட் போட்டியில் விளையாட உள்ளது. ஓகஸ்ட் முதலாம் திகதி 3ஆவது ஆஷஸ் டெஸ்ட் தொடங்குகிறது.



**ரசிகர்கள் சிரிப்பு:**

ஆஷஸ் தொடரை வெல்வோம் என்று கிளார்க் கூறியபோது, மைதானத்தில் இருந்த ரசிகர்கள் சிரித்தனர்: இதனை கிளார்க்கும் கவனித்தார். அவர்களின் சிரிப்பை கிளார்க் சபதமாக எடுத்துக் கொண்டதாகவே தெரிகிறது.

**மீண்ட வரலாறு:**

இதற்கு முன் ஆஷஸ் தொடரில் இதே போல் முதல் இரு டெஸ்ட் போட்டிகளில் தோல்வியுற்று பின், வெகுண்டெழுந்து தொடரை வென்ற சாதனைகளும் நிகழ்ந்துள்ளன. 1936-37ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் இதேபோன்றதொரு சூழலை அவுஸ்திரேலியா தனது சொந்த நாட்டிலேயே சந்தித்தது.

அடுத்து நடைபெற்ற 3 டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

அப்போது அணியில் கிரிக்கெட் ஜாம்பவானான டான் பிராட்மேன் இருந்தார். அத் தொடரில் பிராட்மேன் 810 ஓட்டங்கள் குவித்தார்.

அந்த நிகழ்வு மீண்டும் ஈடேறுமா என்று அந்நாட்டு ரசிகர்கள் ஆர்வத்துடன் அடுத்த போட்டிகளை எதிர்நோக்கிக் காத்துள்ளனர்.

சமீபத்தில் இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த அவுஸ்திரேலிய அணி, 4-0 என்ற கணக்கில் தொடரை இழந்தது குறிப்பிடத்தக்கது.

**ஜோ ரூட்டுக்கு குக் பாராட்டு:**

ஆஷஸ் தொடரின் 2ஆவது டெஸ்ட் போட்டியில் ஜோ ரூட் 180 ஓட்டங்கள் குவித்ததுடன், முக்கியமான நேரத்தில் நிலைத்து நின்று ஆடி வந்த கிளார்க்கையும், க்வாஜாவையும் வெளியேற்றி ஆட்டத்தில் திருப்புமுனை உண்டாக்கினார். 22 வயது நிரம்பிய ரூட், 8 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார்.

இந்த ஆட்டத்தில் ரூட்டின் பேட்டிங் நேர்த்தியாக இருந்தது என்று இங்கிலாந்து அணித் தலைவர் குக், அவருக்கு பாராட்டு தெரிவித்தார். அவர் மேலும் கூறியது: நெருக்கடியான நேரத்தில் தொடக்க வீரரான ரூட், பதற்றமின்றி விளையாடி சதமடித்து பெரிய விடயம். ஆஷஸ் தொடரை 5-0 என்ற கணக்கில் வெல்வது குறித்து தற்போது கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது என்று தெரிவித்தார்.

## பிக்பாஷ் லீக் தொடரிலிருந்து ஷேன்வோர்ன் ஓய்வு

இவ்வாண்டுக்கான பிக்பாஷ் லீக் தொடருக்கான போட்டி அட்டவணை அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. கடந்தாண்டை விட அதிகரித்த எண்ணிக்கையிலான போட்டிகளைக் கொண்டு இத்தொடர் அறிவிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இத்தொடர், பெப்ரவரி 15ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

கடந்தாண்டு 44 நாட்கள் இடம்பெற்றிருந்த இத்தொடர், இம்முறை 58 நாட்கள் கொண்ட தொடராக இடம்பெறவுள்ளது.

இவ்வாண்டுக்கான தொடரில் ஷேன் வோண் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப் பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு ஐ.பி.எல் போட்டிகளில் பங்குபற்றிய பின்னர் தனது ஓய்வினை அறிவித்த ஷேன் வோண், அந்தாண்டு இடம்பெற்ற பிக்பாஷ் லீக் போட்டிகளுக்கான ஓய்விலிருந்து வெளியே வந்திருந்ததோடு, கடந்தாண்டுக்கான போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தார்.

எனினும், தற்போது தான் ஓய்வுபெறுவற்கான தருணம் ஏற்பட்டுள்ளதாக ஷேன் வோண் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக, மெல்பேர்ன ஸ்டார்ஸ் அணியின் தலைவராக கமரன் வைட் செயற்படவுள்ளார்.

தவிர, பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணி சார்பாகப் போட்டிகளின் பங்குபற்றிய மைக்கல் ஹசி, இம்முறை சிட்னி தண்டர்ஸ் அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபெறவுள்ளார்.

சிட்னி தண்டர்ஸ் அணி கடந்த 2 பருவ காலங்களிலும் இரண்டே இரண்டு போட்டிகளில் மாத்திரம் வெற்றிபெற்றுத் தடுமாறி வருகிறது. அவ்வணியின் தலைவரான மைக்கல் கிளார்க் தேசிய அணிக்கான போட்டிகளில் பங்குபற்றவுள்ளதால், அவருக்குப் பதிலாக மைக்கல் ஹசியே சிட்னி தண்டர்ஸ் அணியின் தலைவராகச் செயற்படவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெ. ஆபிரிக்காவை வென்றது இலங்கை



தென்னாபிரிக்க அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் டக் வேத் லூயிஸ் முறைப்படி இலங்கையணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

ஏற்கெனவே முதலாவது போட்டியில் இலங்கை அணி 180 ஓட்டங்களால் தென்னாபிரிக்காவை வீழ்த்தி அபார வெற்றி பெற்றிருந்தது.

கொழும்பு ஆர். பிரேமதாசா மைதானத்தில் 2வது போட்டி நேற்று பகல் இரவு ஆட்டமாக இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கையணியின் தற்காலிக அணித்தலைவர் சந்திமல் முதலில் துப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.2 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 223 ஓட்டங்ளை பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டதன் காரணமாக ஆட்டம் அதனுடனே நிறுத்தப்பட்டது.

துடுப்பாட்டத்தில் இலங்கையணி சார்பாக டில்சான், சந்திமல் தலா 43 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோனே மோக்கல் 3 விக்கெட்டைக் கைப்பற்றினார்.

டக் வேத் லூவிஸ் முறைப்படி தென் ஆபிரிக்க அணிக்கு வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தென் ஆபிரிக்க அணி 21 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 104 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மீண்டும் மழை குறுக்கிட்டதன் காரணமாக டக் வேத் லூவிஸ் முறைப்படி இலங்கையணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கையணியின் தற்காலிக அணித்தலைவர் சந்திமல் தெரிவுசெய்யப்பட்டார்.



# தேசிய இளைஞர் வி.விழா

(மானிப்பாய்)

25வது தேசிய இளைஞர் விளையாட்டு விழா நாளை தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி வரை பொலநறுவை தேசிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து இந்த விளையாட்டுப் போட்டியினை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த போட்டிக்கு நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 3,000 வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். ஆண் மற்றும் பெண்கள் கலந்துகொள்ளும் 64 போட்டி நிகழ்வுகள் இங்கு இடம்பெறவுள்ளன.

இந்த இளைஞர் விளையாட்டுப் போட்டியில் புதிய சாதனை நிலைநாட்டும் முதலாவது வீர மற்றும் வீராங்கனைக்கு கார் ஒன்று பரிசாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 25ஆம் திகதி 3.30 மணிக்கு இடம்பெறும் ஆரம்ப வைபவத்திற்கு பிரதம் அதிதியாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன் இறுதி நிகழ்வு 28ஆம் திகதி 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர் மொகான் லால் கிரேரு. அமைச்சின் செயலாளர் கே.எ. திலகரத்தின தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் பியூப் பெரேரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதி நாள் நிகழ்வன்று இரவு 8 மணிக்கு இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. கடந்த வருடம் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் கம்பஹா மாவட்டம் சாம்பியனாகவும் 2வது இடத்தை இரத்தினபுரி மாவட்டமும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (23)



கொக்குவில் ஐக்கிய விளையாட்டு கழகம், மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அமரர் ப. சச்சிதானந்தனின் ஞாபகார்த்தமாக இ.ச.பே. நாகரத்தினம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திய மாபெரும் கிரிக்கெட் சுற்றுபோட்டி இறுதியாட்டமும் பரிசில் வழங்கலும் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

சம்பியனாகிய பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தினரை படத்தில் காணலாம். (23)

# பிக்பாஷ் லீக் தொடரில் மீண்டும் முரளிதரன்



பிக்பாஷ் லீக் தொடரில் மெல்போர்ண் றெனிகேட்ஸ் அணி சார்பாக முத்தையா முரளிதரன் மீண்டும் இவ்வருடமும் பங்குபெறவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தைத்தொடர்ந்தும் இவ்வருடமும் முத்தையா முரளிதரன் அவ் வணியால் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

41 வயதான முத்தையா முரளிதரன் கடந்தாண்டு மெல்பேர்ண் றெனிகேட்ஸ் அணி சார்பாக சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தார். அவ்வணி சார்பாக 11 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவராகக் காணப்பட்டார்.

இந்நிலையிலேயே இவ்வாண்டும் அவ்வணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்ற முத்தையா முரளிதரன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் புதிதாக எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள சுழற்பந்து வீச்சாளரான பாவத் அஹமட்டுடன் இணைந்து அவர் விளையாடவுள்ளார்.

மெல்பேர்ண் றெனிகேட்ஸ் சார்பாக டெஸ்ட் பந்துவீச்சாளர்களான பீற்றர் சிடில், ஜேம்ஸ் பற்றிசன் ஆகியோரும் விளையாடவுள்ளனர்.

இதில், ஜேம்ஸ் பற்றிசன் உபாதைக்குள்ளாகி ஆஷஷ் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், அவ்வுபாதையிலிருந்து குணமாகி விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிக்பாஷ் லீக் தொடர் எதிர்வரும் டிசெம்பர் 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவில் பாரம்பரிய வி. விழா

நெடுந்தீவு மக்களால் நடத்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டுக்களின் இறுதிநாள் நிகழ்வில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கும் நெறிப்படுத்தலுக்கும் அமைய நேற்று முன்தினம் திங்கட்கிழமை மற்றும் நேற்று செவ்வாய்கிழமை ஆகிய தினங்களில் பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் பாரம்பரிய விளையாட்டுக்களான கீறிஸ் மரம் ஏறுதல், கயிறு இழுத்தல், குதிரைப் பந்தயம், யானைக்கு கண்வைத்தல், கபடி ஆகிய போட்டிகளின் இறுதிப்போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகள் மற்றும் கழகங்களைச்சேர்ந்தோருக்கு அமைச்சர் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது மக்களின் ஒருமைப்பாட்டையும், நல்லுறவையும் வலுப்படுத்தும் நோக்கில் இப்பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் இறுதிப் போட்டிகளுக்கு தெரிவாகி வெற்றிபெற்ற கழகங்கள் மற்றும் வீர, வீராங்கனைகளுக்கு அமைச்சர் அவர்கள் வெற்றிக் கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கி கௌரவித்த அதேவேளை ஏனைய போட்டிகளில் வெற்றிபெற்ற கழகங்கள் மற்றும் வீர, வீராங்கனைகளுக்கு ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), நெடுந்தீவு பிரதேச செயலர் சிறி, ஈ.பி.டி. பியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளர் டானியல் றெக்சின் உள்ளிட்டோர் வழங்கி வைத்தார்.

அத்துடன் இந்நிகழ்வில் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, நெடுந்தீவு வைத்திய அதிகாரி மற்றும் இராணுவ, பொலிஸ், கடற்படை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற....

மீற்றருக்கு அதிகரிக்கும் என வளிமண்டல வியல் திணைக்களம் கூறியுள்ளது.

இதேவேளை கன்யொன், மேல் கொத்மலை லக்ஷபானா, காஸில்றீ ஆகிய நீர்த்தேக்கங்களில் உச்ச அளவுக்கு நீர் நிரம்பியுள்ளதால் வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு குறித்த பகுதிகளைச் சேர்ந்தவர்களை பாதுகாப்புடன் இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (எ-11)

## ஐ.ம.சு.கூட்ட....

நடக்கிறது என்று சொல்கிறோமோ அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. எது நடக்கும் என்று கூறுகின்றோமோ அதுதான் நடக்கும்.

எமது மக்களின் உரிமைக்காக நாம் சுமந்திருக்கும் எமது உறுதிமிக்க உணர்வுகளும் அரசுடன் உறவைக் கொண்டிருக்கும் எமது வலிய கரங்களும் ஒன்றிணைந்தே இதுவரை எமது மக்களின் ஒ ளிமயமான வாழ்க்கைக்காக திடம் கொண்டு உழைக்க முடிந்திருக்கிறது.

உரிமை என்பது வெறுமனே பேசிக் கொண்டிருப்பதற்கான பொழுதுபோக்கு விடயமல்ல. அது அடைந்தே தீர வேண்டிய எமது மக்களின் மாபெரும் சொத்து. உரிமை என்பது தனியே அரசியலுரிமை மட்டுமல்ல.

எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்களை மறுபடியும் அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தி, எமது மக்களின் வீடுகள் தோறும் வாழ்வியல் எழுச்சியை வரவழைத்து, எமது மக்களின் துயர் துடைக்கும் தேச இலட்சியப் பணிகளையும் கொண்டதேயாகும்.

எமது மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்து வருபவர்களாகிய நாம் நிறுத்தியிருக்கும் வேட்பாளர்களை வெல்ல வைப்பதன் மூலமே எமது மக்களுக்கான இலட்சியக் கனவுகள் நிறைவேறும்.

கிடைக்கின்ற அரசியல் அதிகாரத்தைப் பெற்று, இன்னும் பெற வேண்டிய அதிகாரங்களைப் பெறவல்ல, முதலமைச்சர் ஒருவரை வடக்கு தேசத்தின் விடிவெள்ளியாக நீங்கள் பெற்றிடவும் நானே பொறுப்பு.

அப்போது என்கனவாகிய உங்கள் கனவு நிறைவேறும். அரசியலுரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் பெற்றோம் என்ற செய்தி அரங்கேறும் என்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. (எ-4)





மலேசியாவில் வேலை வாய்ப்பு
நம்பிக்கை மிக்க கம்பனிகள் ஊடான தொடர்பு

✓ Coca cola Company க்கான வேலையாட்களில் முதல் வரும் 10 பேருக்கு மட்டுமே அனுமதி.

சம்பளம் 65,000/- முதல் 75,000/- மேலதிக நேர வேலை உண்டு

✓ இந்தியன் ஹோட்டல்கள்
✓ ஹாஷியா நிறுவனம்
✓ McDonald's நிறுவனத்தில்
✓ KFC
✓ MC
✓ Food City

சம்பளம் 45,000/- முதல் 55,000/- + மேலதிக நேர வேலை உண்டு

உடனே அழையுங்கள் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.


ஒரு பிரிவில் 10 வேலை ஆட்கள் மட்டுமே, மேலதிக தொடர்புகளுக்கு 0756197738

(C-4114)

வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்
வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிறி
G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும்.
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு: Type <BIT><your name> & send to 772 395 895
(C-4108)


## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து சுந்தரலிங்கம்



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சுந்தரலிங்கம் 23.07.2013 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான தம்பிமுத்து தங்கம்மாவின் பாசமிகு மகனும், காலம் சென்றவர்களான தம்பிப்பிள்ளை பாக்கியம் அவர்களின் மருமகனும், தெய்வேந்திரராணியின் அன்புக் கணவரும் சுபாசினி(பிரான்ஸ்), சுபாஸ்கரன்(பிரான்ஸ்), சதிஸ்வரன், றஜிவ்கரன்(பிரான்ஸ்)ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன், பாலினி, சோபனா, அமிலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கரிஸ், கிசாந், சாருஜா, டிலக்சி, லக்சிகா, யதுரா, சாரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலம்சென்ற ராசய்யா, காலம்சென்ற ரத்தினம், பொன்னுத்துரை, காலம்சென்ற தில்லைராசா, ராசாதுரை லோகேஸ்வரநாதன், நல்லைநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24.07.2013 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பி.ப 01.00மணிக்கு வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி தெய்வேந்திரராணி (0212231072)
மகள் சுபாசினி (00330148381824)
மகன் சுபாஸ்கரன் (00940719072198)
மகன் சதிஸ்கரன் (0094[illegible])
மகன் றஜீவ்கரன் (ஜீவன்) (0033[illegible])

(C-4112)

## ஆஸி புறப்பட்ட....

வில்லை. இந்தநிலையில் படகில் சென்றோரின் உறவினர்கள் பெரும் கவலையடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கும் பப்புவா நியூகினிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள அகதிகள் தொடர்பான உடன்படிக்கையையும் கருத்திற்கொள்ளாது இந்த அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளனர். (எ-11)

## பிந்திய செய்தி....

அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்டுச்சென்ற சட்டவிரோத படகொன்றே இவ்வாறு தத்தளித்துக்கொண்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

"சமின் புத்தா" என்ற படகே இவ்வாறு தத்தளித்துக்கொண்டிருப்பதாகவும் அந்த படகில் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்களே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இயந்திர கோளாறு காரணமாகவே படகு தத்தளித்துக்கொண்டிருப்பதாக ரேடார் தொடர்பாடல் மூலமாக கண்டறியப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் இலங்கை கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## தமிழரசுக்....

தெடுக்கப்பட்டுள்ளனர்.

இம் மூவரும் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் கல்வி மற்றும் சமூக விழுமிய மேம்பாட்டிற்காக செயற்பட்டு வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

## சுயாட்சி....

இலங்கையை இரண்டாக பிளந்து தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அது தமிழ் மக்களின் சட்ட பூர்வமான உரிமையாகும் என கெலம் மக்ரே குறிப்பிட்டதாக திவயின சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை சீர்குலைப்பதற்கு தூண்டும் நோக்கில் புலி ஆதரவாளர்கள் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விருந்துபசாரமொன்றை அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு உணவு தட்டுக்கு 60 ஸ்ரெலிங் பவுண்ட்கள் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனல் 4 ஊடகவியலாளர் கெலம் மக்ரே மற்றும் பி.பி.சி ஊடகவியலாளர் பிரன்ஸிஸ் ஹரிசன் ஆகியோர் இலங்கை மாநாட்டுக்கு செல்ல அனுமதிக்க வேண்டுமென பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் அலிஸ்டர் பட்டிடம் புலிஆதரவாளர்கள் கோரியுள்ளனரென அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## கொழும்பில்....

வைத்தியசாலைக்கு முன்னால் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் அதற்குள் சிக்கிய நபர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 39 வயதான நபர் ஒருவரே இதன்போது உயிரிழந் துள்ளதாக இடர் முகாமைத்து நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை வீசிய கடும் காற்று காரணமாக மரம் முறிந்து விழுந்துள்ளது.

இந்நிலையில் மரம் முறிந்து விழுந்தமையின் காரணமாக கப் வண்டி ஒன்றும் மோட்டார் வண்டி ஒன்றும் சேதமடைந்துள்ளது. (எ-11)

## பிரி.நாடாளு....

இதில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், இலங்கையிலுள்ள அந்நாட்டின் தூதர் அலுவலகத்தின் உயரதிகாரிகளும் இருந்தனர்.

கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா மற்றும் சிறீதரன் ஆகியோர் பங்குபெற்றனர்.

பேச்சுவார்த்தைகளின் போது இலங்கையின் வடபகுதியில், போருக்கு பின்னரான காலத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கை மற்றும் வாழ்வாதார நிலைமைகள், மாகாண சபைத் தேர்தல்கள் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

பல பகுதிகளில் இராணுவம் தொடர்ந்து மக்களின் காணிகளை ஆக்கிரமித்துள்ளதாவும், இதன் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாத ஒரு சூழல் உள்ளது என்றும் தமது தரப்பில் சுட்டிக் காட்டப்பட்டதாகவும் சிறீதரன் கூறினார்.

வட மாகாண சபைத் தேர்தலின் மூலமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களுக்காக தனியான ஒரு ஆட்சியை நடத்தும் நிலைப்பாட்டில் இருப்பதாக பிரிட்டிஷ் தரப்பினருக்கு சிலர் கூறியதாகவும், அது குறித்தும் விவாதம் இடம்பெற்றதாகவும் கூறிய சிறீதரன், இந்தியா மற்றும் சுவிஸ் போன்ற நாடுகளில் உள்ள சமஷ்டி முறையை ஒத்த, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆட்சி மற்றும் அதிகாரப் பரவலாக்கத்தையே தாங்கள் விரும்புவதாகவும் அவர்களிடம் தெரிவித்ததாகவும் கூறினார். (எ-11)

## போலி நாணயத்....

அச்சிடப் பயன்படும் தாள்கள் மற்றும் அச்சிடப்பட்ட போலி நாணயத்தாள்கள் என்பனவும் பெருமளவில் மீட்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது.

போலி நாணயத்தாள் அச்சிடும் குறித்த இளைஞர் அப்பகுதியில் அச்சு நிறுவனம் ஒன்றினை நடத்தி வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள குறித்த இளைஞர் தன்னால் அச்சிடப்படுகின்ற போலி நாணயத்தாளினை யாழ்.மாவட்டம் உட்பட பல மாவட்டங்களிற்கும் விநியோகித்து வந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இப் போலி நாணயத்தாள்கள் அச்சிடும் முகவருடன் வங்கி ஊழியர் ஒருவர் தொடர்புபட்டுள்ளார் எனவும், எனினும் குறித்த வங்கி ஊழியர் இதுவரை பொலிஸாரினால் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் உள்ளமையை அண்மைய கைதுகள் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## திரைப்பட....

நிலையம் திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான மஞ்சுளா பின்னர் பல முன்னணி நடிகர்களுடன் நடிக்கும் வாய்ப்பை பெற்றார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் நடித்த ரிக்ஷாக்காரன், உலகம் சுற்றும் வாலிபன் உட்பட பல படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

1970-ம் ஆண்டுகளில் தமிழ் மட்டுமல்லாமல், தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளிலும் நடித்தார்.

அக்காலகட்டத்தில் தென்னிந்தியாவின் முன்னணி நடிகர்களாக இருந்த எம்.ஜி.ஆர். சிவாஜி, ஜெமினி கணேசன், என்.டி.ராமாராவ் உட்பட பல பிரபலங்களுடன் இணைந்து அவர் திரைத் துறையில் வலம் வந்தார்.

பின்னர் கமலஹாசன், ரஜினி காந்த் மற்றும் கன்னட நடிகர் விஷ்ணுவர்தன் ஆகியோருடனும் நடித்த மஞ்சுளா திரைப்பட நடிகர் விஜயகுமாரை திருமணம் செய்து கொண்டார். (எ-11)



## கண்ணீர் அஞ்சலி

வலம்புரிக் குடும்பத்தில் பணியாற்றிய
திரு. சு சதிஸ்கரன் அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்
### தம்பிமுத்து சுந்தரலிங்கம்
(உரும்பிராய் தெற்கு)

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

- வலம்புரிக் குடும்பம் -

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.